Vol.1: Issue – 1, April – 2021

ISSN : 2583-0139

புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பது அறிவு – காலாண்டிதழ்

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

பதிப்பாசிரியர்

முனைவர் ச.தங்கமணி

Editor-in-Chief

Dr S.Thangamani

இணைப் பதிப்பாசிரியர்

முனைவர் ச.கோபிநாத்

Associate –Editor

Dr C.Gobinath

ஆசிரியர் குழு

முனைவர் ஜா.அமிர்தலெனின்

முனைவர் மனோன்மணி தேவி

முனைவர் ஆ.முத்தையன்

முனைவர் சா.யமுனாதேவி

முனைவர் க.வெள்ளியங்கிரி

முனைவர் ரா.பிரேம் குமார்

முனைவர் இரா.கோகுல்

நிறுவனர்

முனைவர் ம.சிவபாலன்

மசிவன் பதிப்பகம்

விழுப்புரம் – 605755

editor@pulamejournal.com

editor@masivanpathippagam.com

pulamejournal@gmail.com

+919486069548

## உள்ளடக்கம்

1 சோமாசி மாறனார் – புராண ஒப்பீட்டுப் நோக்கு / Somasi Maranar – A Mythical Comparitive Study

முனைவர் கோகுல் இரா / Dr Gokul R — 1-10

2 இலக்கணம் பிறழா இலக்கியம் முல்லைக்கலி / Invariable grammatical elements of literature in Mullaikali

புவனேஸ்வரி மூ / Bhuvaneswari M — 10-16

3 உடலரசியல் நோக்கில் தமிழவனின் ‘ஷம்பாலா’ / Tamilavan's Sambala in Physiological Perspectives

முனைவர் ராஜா இரா / Dr Raja R — 17-26

4 வள்ளுவத்தில் மூடநம்பிக்கை எதிர்ப்பியல் சிந்தனைகள் / Anti-superstious perspectives in Thirukkural

முனைவர் மா.தினேஷ்வரன் / Dr Dineshwaran M — 27-33

5 கடல்வாழ் மீன் இனங்களும் பயன்பாடுகளும் / Marine fish species and its uses

முனைவர் து. சவிதா / Dr Savitha D — 34-47

© Copyright to PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES 2021 • All Rights Reserved •

# சோமாசி மாறனார் – புராண ஒப்பீட்டுப் நோக்கு

# Somasi Maranar – A Mythical Comparitive Study

**முனைவர் கோகுல் இரா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் –020.

**Dr Gokul R**, Assistant Professor, Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya college of arts and science, Coimbatore – 020.

DOI:10.5281/zenodo.5105813

## Abstract

Somasi Maranar is a famous one among the 63 Nayanmars, the devotees of Lord Shiva. If we analyse various religious scriptures like Thiruthondar Puranam, Thiruvandhadhi and Thiruambar Puranam explains the life history of Somasi Maranar in daetail. Moreover these text expains the structural differences of Epics, changes in vedhas, invariably being a devotee of Lord Shiva and being compationate along with fellow devotees as such devotions of saiva are expressed clearly through it.

## ஆய்வுச் சுருக்கம்

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரான சோமாசி மாறனாரின் வரலாற்றை திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம், திருஅம்பர்ப் புராணம் ஆகிய நூல்களின்வழி ஒப்பிட்டு ஆராய்ந்தால் மாறனாரின் வரலாறு நன்கு துலக்கம் பெறுகிறது. மேலும் புராண அமைப்பு வேறுபாடுகள், வேத வேள்வி மடைமாற்றம், எத்தன்மையராயினும் ஈசனார் அன்பராயின் வழிபடுவது, அடியார் இணக்கம் போன்ற சைவ ஒழுகலாறுகள் கட்டமைக்கப்பட்ட சூழல் போன்றவையும் இதனால் வெளிப்படுகின்றன.

## Keywords:

சோமாசி மாறன் வரலாறு – சுந்தரரின் தொகுப்பும் முதற்பதிவும் – திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம், திருஅம்பர்ப் புராணம் கூறும் மாறனார் வரலாறு – நம்பியாண்டார் நம்பி கூறியதையே சேக்கிழார் கூறுதல் – திருஅம்பர்ப் புராணம் தோன்றிய வரலாறு - அந்தணர் – திருவைந்தெழுத்து ஓதுபவர் – சிவனடியார் பேணுபவர் – சுந்தரரின் உற்றார் – வேத வேள்வியும் சிவவேள்வியும் – திருத்தொண்டர் புராணத்தில் மாறனார் பெயரில்லை – இல்லறத்தார் என்ற குறிப்பில்லை – சுந்தரர் தொர்பும் இறைக்காட்சியும் - புலையராக இறைவன் வருதல் – எத்தன்மைத்தாயினும் ஈசனார் அன்பர்.

சைவ சமயத்தை மெய்யியல் இயக்கமாகக் கட்டமைக்கும் செயல்கள் மணிமேகலைக் காப்பியத்தின் காலத்திற்கு முன்பே வழக்கிலிருந்துள்ளதைக் காணமுடிகிறது. ஆனால் பொ.ஆ.பின். நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களாகக் கருதப்பெறும் காரைக்காலம்மையாரும்

திருமூலரும் மெய்யியல், பத்திமை, வழிபடு நெறிமுறைகள், சின்னங்கள் போன்றவற்றையெல்லாம் உள்ளடக்கி சைவத்தைப் பேரியக்கமாக வளர்த்தெடுக்கும் முயற்சியின் முன்னோடிகள் என்பதை அவர்தம் இலக்கியங்கள் காட்டுகின்றன. பொ.ஆ.பின். ஆறு, ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் தேவார மூவர் உட்பட்ட பல சைவ அறிஞர்கள் அதனை மக்கள் இயக்கமாகக் கொண்டு செலுத்தினர். இவர்களின் ஒட்டுமொத்த செயல்பாடுகளின் விளைவாகப் பொ.ஆ.பின். பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் தமிழ் நிலத்தில் வாழ்ந்த பல்வேறு சைவ ஆளுமைகளின் பத்திச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து அவ்வொருங்கிணைப்பின் மூலம் சைவத் திருக்கூட்ட இயக்கமாக அதனை வளர்த்தெடுத்தார். அவ்வொருங்கிணைப்பு முயற்சிதான் ‘திருத்தொண்டர் புராணம்’ என்னும் இலக்கியமாக வெளிப்பட்டது.

### சுந்தரரின் தொகுப்புப் பணி

தேவார மூவருள் காலத்தாற் பிந்தியவரான சுந்தரர்தான் அவரது காலத்திலும் அவருக்கு முன்பும் வாழ்ந்த சைவர்களைத் தொகுத்துப் பதிவுசெய்யும் முயற்சியில் முதன்முதலாக ஈடுபட்டவர் என்று சொல்லலாம். அவருக்கு முன்பு இத்தகைய தொகுப்பு நடந்துள்ளதாக உறுதியாகத் தெரியவில்லை. அத்தொகுப்புதான் திருவாரூரில் அவர் பாடிய ‘திருத்தொண்டத்தொகை’ என்னும் பதிகம். சிவபெருமான் மீது பத்தி கொண்ட அறுபது ஆளுமைகளின் பெயர்ப்பட்டியல் அது. வரலாற்றில் சிலரது பெயர் சுந்தரரின் திருத்தொண்டத்தொகை மூலமாகவே வெளிப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரர் அளித்த பெயர்ப்பட்டியலைக் கொண்டு பொ.ஆ.பின். ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி அப்பட்டியலில் இடம்பெற்றுள்ள ஆளுமைகளின் வரலாற்றைச் சுருக்கமாக ‘திருத்தொண்டர் திருவந்தாதி’ என்னும் தனிநூலாக்கினார். “தனியடியார்களை அறுபத்து மூவர் என்று கணக்கிட்டு முதலில் உணர்த்தியவர் நம்பியாண்டார் நம்பியே” (பன்னிரு திருமுறை வரலாறு, முதற்பகுதி, ப. 18) என்பது வரலாறு. இவர்கள் இருவரின் தொகுப்பு, வகுப்புகளை வைத்துக்கொண்டுதான் சேக்கிழார் வரலாறும் புனைவுமாக திருத்தொண்டர் புராணத்தை இயற்றினார்.

> **“அந்த மெய்ப் பதிகத்து அடியார்களை**
> **நந்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி**
> **புந்தி யாரப் புகன்ற வகையினால்**
> **வந்த வாறு வழாமல் இயம்புவாம்”** **(திருத்தொண்டர் புராணம், பா. 49)**

என்ற அவர்தம் பாடலே அதற்குச் சான்று.

திருத்தொண்டர் புராணத்துள் சேக்கிழார் விரித்துரைத்த தனியடியார்களுள் ஒருவர் சோமாசி மாறனார். அதிலுள்ள சில குறிப்புகளும் சோமாசி மாறனார் குறித்தெழுந்த பிற நூல்கள் தரும்

செய்திகளும் குறிப்பிடத்தக்க வரலாற்று வெளிச்சத்தை அளிப்பவை. அவற்றைத் தொகுத்து விளக்கப்படுத்திக் கொள்வதே இக்கட்டுரைச் செல்நெறி.

சோமாசி மாறன் என்ற பெயர் சுந்தரரால்தான் முதன்முதலில் தெரியவருகிறது. சுந்தரர் தனது திருத்தொண்டத் தொகையில் ஊர்ப்பெயரோடு அவரைப் பதிவு செய்துள்ளார்.

**"அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்"** **(தேவாரத் திருப்பதிகங்கள், 7:39:5)**

என்பது சுந்தரர் கூற்று.

**மாறனார் வெளிப்படும் மூன்று நூல்கள்**

சோமாசி மாறனாரின் வரலாறு மூன்று நூல்களின் மூலமாகத் தெரியவருகிறது. 1. நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி, 2. சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணம், 3. மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய திருஅம்பர்ப் புராணம் என்பன.

அம்பர் என்னும் இடத்தில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் சோமாசி மாறனார். அவர் வேதம் சொல்லும் மெய்ப்பொருளை அறிந்தவர். சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தை ஓதுபவர். சுந்தரரின் உற்ற நண்பர் என்பது நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடும் சோமாசி மாறனாரின் வரலாறு.

**"சூதப் பொழில் அம்பர் அந்தணன் சோமாசி மாறனென்பான்**
**வேதப் பொருள் அஞ்செழுத்தும் விளம்பி யல்லால் மொழியான்**
**நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவை யென்னும்**
**மாதுக்குக் காந்தன்வன் தொண்டன் தனக்கு மகிழ்துணையே"**

**(திருத்தொண்டர் திருவந்தாதி, பா. 40)**

என்பது அப்பாடல்.

**திருத்தொண்டர் புராணமும் மாறனாரும்**

திருத்தொண்டர் புராணத்தில் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் சேக்கிழார் ஆறு பாடல்களில் சோமாசி மாறனாரின் வரலாற்றைக் கூறுகிறார். (திருத்தொணடர் புராணம், பா. 3635 – 3640) முதல் ஐந்து பாடல்கள் சோமாசி மாறனாரின் வரலாறாகவும் ஆறாவது பாடல் நம்பியாரூரராகிய சுந்தரர் துதியாகவும் அமைந்துள்ளது. பொதுவாக நம்பியாண்டார் நம்பி நாயன்மார்கள் பற்றிக் கூறும் செய்திகளை விரிவாக உரைப்பது சேக்கிழார் இயல்பு. பெரும்பான்மையான நாயன்மார்களின் வரலாறு அத்தன்மைத்தே. அனால் சோமாசி மாறனாரின் வரலாறு அவரால் அப்படியுரைக்கப்படவில்லை. நம்பியாண்டார் நம்பி ஒரேயொரு பாடலில் சோமாசி மாறனார் குறித்து என்ன செய்திகளைக் குறிப்பிட்டுள்ளாரோ, அவற்றையே ஐந்து

பாடல்களாகச் சேக்கிழார் இயற்றியுள்ளார். மறையவர், வேள்வி இயற்றுபவர், திருவைந்தெழுத்து ஓதுபவர், சிவனடியார்களைப் பேணுபவர், சுந்தரரின் நண்பர் என்பதுதான் சோமாசி மாறனார் குறித்து சேக்கிழார் தரும் வரலாறு. நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்ட சோமாசி மாறனாரின் பெயர் சேக்கிழாரால் குறிப்பிடப்படாமல் இருப்பதும் நோக்கத்தக்கது.

மூன்றாவது தனிநூலான திருஅம்பர்ப் புராணம் முப்பத்தியெட்டு பாடல்களால் சோமாசி மாறனாரின் வரலாற்றைச் சற்று விரிவாகவே பேசுகிறது. (திருஅம்பர்ப் புராணம், பதின்மூன்றாவது படலம், பா. 777 – 814). சோமாசி மாறனார் குறித்து திருத்தொண்டர் திருவந்தாதியும் திருத்தொண்டர் புராணமும் குறிப்பிடாத செய்திகளை திருஅம்பர்ப் புராணம் குறிப்பிடுகிறது.

**திருஅம்பர்ப் புராணம் எழுந்த வரலாறு**

மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய திருஅம்பர்ப் புராணம் பதினைந்து படலங்களையும் ஆயிரத்தேழு செய்யுட்களையும் உடையது. இதில் பதின்மூன்றாவது படலம் 'மாறநாயனார் வழிபடு படலம்'. இப்பகுதியே சோமாசி மாறனாரின் வரலாற்றை விளக்கப்படுத்துகிறது. "சிறிய வரலாற்றையும் வரிவாக அமைத்துப்பாடும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பாவன்மையை இப்படலத்தால் அறியலாம்" என்பார் உ.வே.சாமிநாதர். (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம், ப.213).

திருஅம்பர்ப் புராணம் எழுதப்பட்ட வரலாறு குறிப்பிடத்தக்கது. உ.வே. சாமிநாதர் எழுதிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சரித்திரம் இப்புராணம் எழுதப்பட்ட வரலாற்றை எடுத்துக்காட்டுகிறது. சோமாசி மாறனாரின் வரலாற்றை அணுகும்பொழுது திருஅம்பர்ப் புராணம் எழுந்த வரலாற்றையும் அறிந்துகொள்வது மிகத் தேவையானது. ஏனெனில் நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் மிகச் சுருக்கமாகக் கூறிய சோமாசி மாறனாரின் வரலாறு இப்புராணத்தால்தான் விரிவாகத் துலக்கம் பெறுகிறது. எனவே இப்புராணத்தின் வரலாறும் இவண் சுருக்கமாகக் காண்பது பொருந்தும்.

அம்பர் என்னும் இடத்தில் (மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள ஊர்) மீனாட்சிசுந்தரம் பிள்ளை தங்கியிருந்தபொழுது அவ்வூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முதலியோர் அம்பர் தலத்திற்குரிய வடமொழிப் புராணத்தைத் தமிழில் பாட வேண்டும் என்று அவரிடம் கேட்டுக் கொண்டனர். அவர் வடமொழி ஏட்டுச் சுவடிகளைப் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. திருமங்கலக்குடி சேஷையங்கார் என்பவருக்குக் கடிதம் எழுதி தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் தேடிப்பார்க்கச் செய்தார். அவர் அரிதின் முயன்று அவ்வடமொழிப் புராண ஏடுகளைக் கண்டடைந்து பிரதிசெய்து 1869ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் அனுப்பிவைத்தார். தக்க வடமொழி அறிஞர்களைக் கொண்டு தமிழ் உரைநடையில் அதனை மொழிபெயர்த்து

வைத்துக்கொண்டு மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாப்புனையத் தொடங்கினார். அவர் பாடல்களைச் சொல்ல சிவப்பிரகாசர் என்னும் வீரசைவ மாணாக்கர் ஏட்டில் எழுதி வந்தார். (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதல் பாகம், பக். 328, 329).

சில நாட்கள் கழிந்த பின்னர் உ.வே.சாமிநாதர் மூலமாக அப்புராணத்தில் சில திருத்தங்களைச் சொல்லித் திருத்தி அந்நூலை முற்றுவித்தார். இப்படித் திருத்தம் செய்தமைக்கு அவர் தன்னிடம் ஒரு காரணத்தைக் கூறியதாக உ.வே. சாமிநாதர் பதிவு செய்துள்ளார். " எழுதுகிறவர்களில் நான் சொன்னபடியே எழுதுவோருமுண்டு. வேறுபடத்திருத்தித் தம் மனம்போனவாறே ஆங்காங்கே எழுதுவோருமுண்டு. இப்புத்தகத்தை இதுவரையில் எழுதிவந்தவர் இரண்டாம் வகையைச் சேர்ந்தவராதலால் ஐயுற்றுப் படிப்பித்து இப்பொழுது திருத்தும்படிச் செய்தேன்" என்பது அப்பதிவு. (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதல் பாகம், ப.83). பின்னர் நல்ல நாள் பார்த்து சிறப்பாகத் திருஅம்பர்ப் புராணம் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

திருஅம்பர்ப் புராணம் குறித்து மீனாட்சிசுந்தரம் பிள்ளை காலத்தில் வாழ்ந்த தமிழறிஞரான தியாகராச செட்டியார் சொன்ன கருத்தும் அதற்கு மீனாட்சிசுந்தரம் பிள்ளை சொன்ன காரணமும் முக்கியமானவை. "பாலியத்திற் செய்த உறையூர்ப் புராணத்தைப் போல இப்புராணம் யோசித்துச் செய்யப்படவில்லை. அம்மாதிரி செய்தால் மிக நன்றாகவிருக்கும்" என்று தியாகராச செட்டியார் கூற, "அவ்வாறு அந்நூல் அமைந்ததற்குக் காரணம் வல்லூர்த் தேவராச பிள்ளையின் பேருபகாரந்தான். அவரைப் போல யாரேனும் என்னைக் கவலையில்லாமல் ஆதரித்து வைத்திருந்தால் இன்னும் எவ்வளவோ செய்வேனே" என்று மீனாட்சிசுந்தரம் பிள்ளை காரணங் கூறினார். (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதல் பாகம், ப.122). எழுத்தாளர்களைப் பேணினால் இலக்கியம் செழிப்புறும் என்பது அவர் கருத்து.

திருமங்கலக்குடி சேஷையங்கார் கடிதம் திருஅம்பர்ப் புராணம் எத்தனை அரும்பாடுபட்டு எழுதப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது. "இவ்விடம் தஞ்சையில் தங்கள் பெருங்கருணையால் க்ஷேமமாயிருக்கின்றேன்… தாங்களன்புடன் வரைந்தனுப்பிய நாளது மாதம் 2-ந் தேதியுள்ள கடிதம் கிடைத்தது. கோயிலுக்கும் இதற்குமாய் அலைந்து கொண்டிருந்ததால் பங்கி அனுப்பத் தவக்கப்பட்டது. அதை மன்னிக்க வேண்டும். இவ்விடம் வேந்திருக்கைக் கலைமகள் விளக்க இல்லத்திலிருந்து எழுதுவித்த ஸ்ரீஅம்பர் க்ஷேத்திர புராணக் கிரந்த புத்தகம் 1க்கு ஏடு 40; மேற்படி புத்தகத்தை இத்துடன் பங்கி மார்க்கமாய்த் தங்களிடத்திற்கு அனுப்பியிருக்கிறேன்… மாயூரம் கலெ. அவர்கள் சில ஸ்தலக் கிரந்தங்களைத் தாம் பார்க்க வேண்டி 200 கிரந்தங்களைக் குறித்தனுப்ப 40 கிரந்தம் அகப்பட்டு எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படியாய் இன்னின்ன பக்கத்திலிருக்கிறதென்று அறிய ஒரு நூறு ஆசாமிகளாய் ஒரு ஆண்டு பிரயாசைப்படினும் அமையாத மிகுதியுள்ளதாயும், பகிரங்கத்திற் கிடைக்கக் கூடாமல் பிரைவேட்டிலாக

வேண்டியதாயுமிருந்தும், அத்தல மகாதேவனருளினாலும், கனம் பொருந்திய தங்கள் கீர்த்திப் பிரதாபத்தினாலும் இப்படிப்பட்ட அருமையான தல அபிமானிகள் முப்பணிகளிற் சிறந்த பணியிஃதே என்று கருதித் துணிந்த பத்திப் பொருளினாலுமே இந்தக் கிரந்தம் அகப்பட்டதேயன்றி, ஏகதேசம் வழங்கிய பொருட் செலவினாலென்று நினைக்கத்தகாது. வெகு பிரயாசைப்பட்டு 4-மாத காலமாய்ப் பரிசீலனை செய்து பார்த்ததில் இனியகப்படாதென்றே நினைத்துவிட்டோம். ஏதோ அகஸ்மாத்தாய் ஒரு பெரும் புத்தகத்தின் மத்தியிலிருப்பதாய்ப் பார்த்து வந்ததில் அகப்பட்டது. ரூ.20 செலவாகியிருக்கிறது" (ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம், பக். 314, 315). சேஷையங்காரின் கடிதம் குறிப்பிட்டதைப் போல இத்தனை அரும்பாடுபட்டு ஏடுதிரட்டி இப்புராணம் எழுதப்பட்டதன் காரணமாகவே நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் சுருக்கமாகக் கூறிய சோமாசி மாறனாரின் வரலாறு விரிவாக உலகிற்குக் கிடைத்துள்ளது.

### அம்பர் தலத்துப் பதிகங்கள்

அம்பரில் இரண்டு பாடல்பெற்ற தலங்கள் உள்ளன. ஒன்று அம்பர் மாகாளம். மற்றொன்று அம்பர்ப் பெருந்திருக்கோயில் என்பன. இரண்டு தலங்களுக்கும் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்கள் கிடைக்கின்றன. திருத்தொண்டர் புராணம் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்தே அத்தலத்திற்குச் சென்றனர்; ஒன்றாகத் தங்கியிருந்து அம்பர் திருத்கோயில் இறைவனை வணங்கினர் என்று கூறுகிறது. (திருத்தொண்டர் புராணம், பா. 2430 – 2436). எனவே திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் இருவரும் அத்தலத்தில் பதிகம் பாடியிருக்க வேண்டும். ஆனால் திருநாவுக்கரசரின் பதிகங்கள் கிடைக்கவில்லை. திருஞானசம்பந்தரின் பதிகங்கள் மட்டுமே கிடைக்கின்றன. அம்பர்ப் பெருந்திருக்கோயில் பதிகத்துள் திருஞானசம்பந்தர் அக்கோயில் கோச்செங்கட்சோழன் கட்டியது என்பதைப் பதிவுசெய்துள்ளார் (தேவாரத் திருப்பதிகங்கள், 3 : 19 : 1, 2, 5, 9). சேக்கிழாரும்,

**"திருவின் ஆர்ந்தகோச் செங்கணான் அந்நகர்ச் செய்த கோயிலைச் சேர்ந்து**
**மருவு வாய்மைவண் தமிழ்மலர் மாலைஅவ் வளவனைச் சிறப்பித்து**
**பெருகு காதலில் பணிந்துமுன் பரவினர் பேணிய உணர்வோடும்"**

**(திருத்தொண்டர் புராணம், பா. 2435)**

என்று இதனைக் குறிப்பிடுகிறார்.

### திருஅம்பர்ப் புராணம் கூறும் மாறனார் வரலாறு

அம்பரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் சோமாசி மாறனார் (திருஅம்பர்ப் புராணம், பா. 777 – 779), திருவைந்தெழுத்து ஓதுபவர் (திருஅம்பர்ப் புராணம், பா.781), சிவனடியார்களை வழிபட்டு அமுதிடுபவர் (திருஅம்பர்ப் புராணம், பா.782 – 785), சுந்தரரோடு நட்பு கொண்டவர் (திருஅம்பர்ப் புராணம், பா. 787 – 795), மாறனார் யாகம் ஒன்றைச் செய்யக் கருதினார்

(திருஅம்பர்ப் புராணம், பா. 796), யாகத்திற்கு இறைவனை அழைக்க சுந்தரரின் உதவியை நாடினார் (திருஅம்பர்ப் புராணம், பா. 797 – 799), இறைவன் புலையராக வந்து அருளினார் (திருஅம்பர்ப் புராணம், பா. 802 – 814) என்பது திருஅம்பர்ப் புராணம் கூறும் சோமாசி மாறனாரின் வரலாறு.

திருஅம்பர்ப் புராணம் கூறும் சோமாசி மாறனாரின் வரலாற்றை வைத்துக் கொண்டு திருத்தொண்டர் புராணத்தை அணுகும்பொழுது சேக்கிழார் குறிப்பாக சில செய்திகளை அதில் பதிவு செய்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. அவற்றுள் சிலவற்றை இவண் சான்றாகக் காட்டலாம்.

**உலகங்கள் உவப்ப வேள்வி புரிபவர்**

சோமாசி மாறனார் முறைமை வழுவாது வேள்வி புரிபவர் என்பது சேக்கிழார் கூற்று. அதனைச் சொல்லுமிடத்து,

**"யாழின் மொழியாள் தனிப்பாகரைப் போற்றும் யாகம்**
**ஊழின் முறைமை வழுவாது உலகங்கள் ஆன**
**ஏழும் உவப்ப புரிந்து"** **(திருத்தொண்டர் புராணம், பா. 3636)**

என்று சொல்கிறார்.

'யாழின் மொழியாள் தனிப்பாகரைப் போற்றும் யாகம்' என்னும் அடி நோக்கத்தக்கது. சிவபெருமானைப் போற்றிச் செய்யப்படும் யாகம் என்பது கருத்து. மாறனார் மறையோதும் குலத்துதித்தவரானாலும் வேத வேள்வியைப் போற்றாமல் சிவத்தை முன்னிறுத்திய வேள்வியைப் போற்றிச் செய்தார் என்பதை அறியமுடிகிறது.

வேத வேள்விகள் இருபத்தியொரு வகையின. அவை மூன்று தொகுப்புகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சோம யாகம், ஹவிர் யாகம், பாக யாகம் என்பன அவை. (பன்னிரு திருமுறை வரலாறு, முதற்பகுதி, ப. 675). க. வெள்ளைவாரணன் தரும் வேள்வி குறித்த குறிப்புகளைக் கொண்டு பார்க்கும்பொழுது இவர் சோமயாகம் செய்தவர் என்று கொள்ளலாம். சோமயாகம் என்பது யசுர் வேதத்தைக் கற்றறிந்த பின்னர் உலக நன்மைக்காக ஆறு அல்லது ஏழுநாட்கள் தொடர்ந்து பதினாறு வேதியர்களைக் கொண்டு செய்யும் யாகம். சோமயாகம் செய்து புகழ்பெற்ற காரணத்தினால் அவரது இயற்பெயரான 'மாறன்' என்பதோடு சோமாசி என்பதை இணைத்து அழைத்தனர் என்றும் கூறுவர். (www.pazhasulapudhusu.in – வேத மரபிலிருந்து சைவத்திற்கு மாறிய நாயனார்).

வேத வேள்விகளுள் ஒன்றான சோம யாகத்தைச் செய்து புகழ்பெற்ற மாறனாரைச் சேக்கிழார், 'யாழின் மொழியாள் தனிப்பாகரைப் போற்றும் யாகம்' புரிந்தவர் என்று கூறுவது ஆராய்தற்குரியது.

**இல்லறநெறி நின்ற சீலர்**

சோமாசி மாறனாருக்குத் திருமணம் ஆயிற்றா என்பது குறித்துத் திருத்தொண்டர் புராணம் கூறவில்லை. சோம யாகம் செய்பவர் என்பதைக் கொண்டு அவர் திருமணம் ஆனவர் என்று கருதலாம். ஆனால் திருஅம்பர்ப் புராணம் அவர் திருமணம் ஆனவர் என்று விளக்கப்படுத்துகிறது. தாராசுரத்தில் உள்ள நாயன்மார் சிற்பநிரலில் காணப்படும் சோமாசி மாறனாரின் சிற்பம் அவர் தனது மனைவியாரோடு அமர்ந்து வேள்வி செய்யும் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**எத்தன்மையராயினும் ஈசரன்பராயின் வழிபடுவர்**

சோமாசி மாறனார் செய்த வேள்விக்கு இறைவன் புலையர் வடிவில் வந்தார் என்று திருஅம்பர்ப் புராணம் கூறுகிறது. ஆனால் இச்செய்தி திருத்தொண்டர் புராணத்தில் இல்லை. ஆனால்,

**"எத்தன்மைய ராயினும் ஈசனுக்கு அன்பர் என்றால்**
**அத்தன்மையார் தாம்நமை ஆள்பவர் என்று கொள்வார்"**
**(திருத்தொண்டர் புராணம், பா. 3637)**

என்ற பாடலடிகள் இறைவன் புலையர் வடிவில் வந்தார் என்பதையும் சோமாசி மாறனார் அவரை வழிபட்டு உய்ந்தார் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

**"அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய் ஆவுரித்துத்**
**தின்றுழலும் புலைய ரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில் அவர்கண்டீர்**
**நாம்வணங்கும் கடவு ளாரே"** **(தேவாரத் திருப்பதிகங்கள், 6 : 95 : 10)**

என்ற அப்பர் தேவாரமும் இத்துடன் இணைத்து நோக்கத்தக்கது.

**அடியார் இணக்கம் இறைக்காட்சி நல்கும்**

சைவ ஒழுகலாற்றில் அடியார் இணக்கம் என்பது இறைவனை அடையச் செய்யும் சாதனங்களுள் ஒன்று. சோமாசி மாறனார் அடியார் வழிபாட்டில் ஊன்றிநின்றவர் என்பதை,

**"ஏதம் புரியும் எயில் செற்றவர்க்கு அன்பர் வந்தால்**
**பாதம் பணிந்து ஆரமுது ஊட்டும் நற்பண்பின் மிக்கார்"**
**(திருத்தொண்டர்புராணம், பா. 3635)**

என்ற திருத்தொண்டர் புராணப் பாடல் குறிப்பிடுகிறது.

சோமாசி மாறனார் தான் செய்த வேள்விக்கு இறைவனை சுந்தரரின் தொடர்பால் வரச்செய்தார் என்று திருஅம்பர்ப் புராணம் குறிப்பிடுகிறது. திருத்தொண்டர் புராணம் இதனை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பாக உணர்த்துகிறது.

**"… இங்கு இது நல்நெறி சேரும் விளக்கம் என்றே**

**வன்தொண்டர் பாதம் தொழுது ஆன சிறப்பு வாய்ப்ப"**

**(திருத்தொண்டர்புராணம், பா. 3635)**

என்பன திருத்தொண்டர் புராண பாடலடிகள்.

**முடிவுரை**

சோமாசி மாறனாரின் வரலாறாக திருஅம்பர்ப் புராணம் குறிப்பிடும் நிகழ்வுகள் திருத்தொண்டர் புராணத்துள் வெளிப்படையாக அல்லாமல் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. காலச்சுழற்சியில் இலக்கியங்களுள் இடைச்செருகலாகச் சிலபாடல்கள் சேர்ந்துவிடுவதைப் போலவே சில கிடைக்காமல் போவதும் அழிந்துபடுவதும் நிகழக் கூடியவைதான். அப்படியான தன்மை சேக்கிழார் இயற்றிய சோமாசி மாறனார் புராணத்திலும் நிகழ்ந்திருக்கக்கூடும். நம்பியாண்டார் நம்பி மாறனாரின் பெயரைக் குறிப்பிட்டும் சேக்கிழார் பெயர் குறிப்பிடாமல் விடுவதற்கான வாய்ப்பில்லை என்பதையும் இவ்விடத்திற் கருத்திற் கொள்ளலாம்.

சோமாசி மாறனார் குறித்து சுந்தரர் கொடுத்த பெயர்ப்பதிவும், நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் அளித்த சுருக்கமான செய்திகளும், திருஅம்பர்ப் புராணம் கூறும் விரிவான நிகழ்வுகளும் அவரது வரலாற்றை அறியத் துணை செய்கின்றன. புராணங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சோமாசி மாறனார் குறித்து வெளிப்படும் வரலாற்று ஒளிச்சிதறல்கள் நாயன்மார்களின் செயல்பாடுகளை ஆழமாக உணர வழிவகுக்கின்றது.

**துணைநின்ற நூல்கள்**


1. சாமிநாதையர். உ.வே. டாக்டர், ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், (இரண்டு பாகங்கள்), டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 2014.
2. ஞானசம்பந்தன் அ.ச. பேராசிரியர் (பதி), தேவாரத் திருப்பதிகங்கள், கங்கை புத்தக நிலையம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, ஜனவரி, 2005.
3. ஞானசம்பந்தன் அ.ச. பேராசிரியர் (பதி), திருத்தொண்டர் புராணம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை, முதற்பதிப்பு, 1993.
4. மீனாட்சிசுந்தரம் பிள்ளை. மகாவித்துவான், திருஅம்பர்ப் புராணம், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 1965.

5. வெள்ளைவாரணன். க. வித்துவான், பன்னிரு திருமுறை வரலாறு (முதற்பகுதி), அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, சிதம்பரம், 1994.
6. www.pazhasulapudhusu.in - வேத மரபிலிருந்து சைவத்திற்கு மாறிய நாயனார்.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**கோகுல், இரா. " சோமாசி மாறனார் – புராண ஒப்பீட்டுப் நோக்கு "** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 2, ஜூலை 2021, பக். 01-10

**Cite this Article in English**

**Gokul, R. " Somasi Maranar – A Mythical Comparitive Study "** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 2, July 2021, pp. 01-10

# இலக்கணம் பிறழா இலக்கியம் முல்லைக்கலி

## Invariable grammatical elements of literature in Mullaikali

**புவனேஸ்வரி மூ,** உதவிப்பேராசிரியர், மொழித்துறை,
ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் –006.
**Bhuvaneswari M**, Assistant Professor, Department of Languages,
Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore – 006

DOI:10.5281/zenodo.5105822

**Abstract**

Tholkappiyam is the first grammar for the moral phenomenon of Mullai. Accordingly the land and morality of Mullai are visualized by the Sangam literature. This article sets out to explore distortions in visual grammar as well.

**Keywords:** Mullaikali, Invariable grammatical, Tholkappiyam

**முன்னுரை**

முல்லை எனும் ஒழுக்க நிகழ்வுகளுக்கு முதன்முதலில் இலக்கணம் வகுக்கிறது தொல்காப்பியம். அதன்படி முல்லையாகிய நிலமும் ஒழுக்கமும் சங்க இலக்கியத்தின்பால் காட்சிப்படுத்தப்படுகிறது. காட்சி வெளிக்கும் இலக்கணத்திற்கும் உள்ள திரிபுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**முல்லைத்திணை**

தொல்காப்பியம் குறிப்பிடும் நான்கு வகையான நிலங்களுள் முல்லை, காடும் காடு சார்ந்த பகுதியைக் கொண்டதாக விளங்குகிறது. இதனை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்"** (தொல்.பொருள்.நூ: 5)

என்ற சூத்திரத்தால் அறியமுடிகிறது. அடர்ந்த காடும், காடு சார்ந்தப் பகுதியுமாதலால் இங்கு தாவரங்களும் விலங்குகளும் மிகுதியாகக் காணப்பட்டன. தாவரங்கள் விலங்களுக்கும் முல்லை நில மக்கள் வளர்க்கும் கால்நடைகளுக்கும் இயற்கை உணவாய் அமைந்தன. இவ்வியற்கைப் பின்னணியே முல்லைப் பாக்களுக்கான காட்சிப் பின்னணியாகவும் அமைந்தது. நிலமோடு கூடிய கார்கால வர்ணனையும், மாலைக்கால வர்ணனையும் சிறப்புச் சேர்த்தன எனலாம்.

**முல்லைப்பாடல்கள்**

வினைமேற் சென்ற தலைவன் தான் கூறியபடி, கார்காலம் தோன்றியும் இன்னும் வரவில்லையே! என்ற ஆற்றாமையோடு அவனை எதிர்பார்த்து அமையும் உள்ளப்போக்கை வெளிப்படுத்துவதாக,

**"பாடு இமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு**
**கோடு கொண்ட எழுந்த கொடுஞ் செலவு எழிலி**
**பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"** (முல்லைப்பாட்டு, பா.வரி : 4-6)

இப்பாடல் அமைகிறது. முல்லைக்கான கருப்பொருள் பின்னணி இப்பாடல் வரிகளின் பொருண்மைக்கு பொருந்துவதாக உள்ளது. மேலும்,

**" இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்**
**வன்புலக் காட்டுநாட் டதுவே அன்புகலந்து**
**நம்வயிற் புரிந்த கொள்கையோடு நெஞ்சத்து**
**உள்ளினள் உறைவோள் ஊரே முல்லை "** (நற்றிணை, 59 பா : 5-9)

எனும் முல்லைப்பாடல் ஒன்று தலைவி வன்புல காட்டினிடத்து வாழ்பவள் என்றும், கார்காலம் வந்தாயிற்று அவள் தனக்காக காத்திருப்பாள் எனக் கூறி தலைவன் பாகனிடம் விரைந்து செலுத்துவாயாக! என்று உரைப்பதாக அமைகிறது.

முல்லைக்கலி நீங்கலாக சங்க இலக்கியத்தில் இடம்பெறும் அனைத்து முல்லைப்பாடல்களும் கருப்பொருள் பின்னணியையோ நிலம், பொழுதாகிய முதற்பொருள் பின்னணியையோ அல்லது காத்திருத்தல் எனும் உரிப்பொருள் பின்னணி எனும் ஏதேனும் ஒன்றிணைப் புலப்படுத்துகிறது என்றாலும் முல்லை எனும் சமூகப் பின்னணியை பெரிதும் வெளிக்காட்டவில்லை என்று கூறலாம். ஏனெனில், ஒரு இனத்தின் அடையாளம் என்பது அதன் கலாச்சாரப் பண்பாட்டுப் பின்னணியிலேயே உளது. ஆகையால், கலை கலைக்காகவே அல்லது வாழ்க்கைக்காகவே என்பதில் மேற்குறிப்பிட்ட முல்லைப்பாடல்கள் கலை கலைக்காகவே என்ற பாதையில் செல்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

**வாழிடம்**

வேட்டையுகச் சமுதாயத்தில் காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த மக்கள், மிருகங்கள் வசித்த குகைகளிலே தற்காலமாய் தங்கினர். அடுத்த நிலையாக, மனிதன் வேட்டையாட நாடோடிகளாய்த் திரிவதை நிறுத்தி கால்நடை மேய்த்து அதனை வளர்க்க ஆரம்பித்தனர். தற்காலிகமாய் தங்களுக்கென குடியிருப்புகளையும் அமைத்துக்கொண்டனர். நிலைத்த குடியிருப்பு என்பதின்றி மேய்ச்சலுக்காக செல்லுமிடந்தோறும் குடியிருப்புகளை அமைத்தனர். பின்னர் நிலைத்த குடியிருப்புகளையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

இவர்களது ஊர், பாடி, சேரி, பள்ளி என விளங்கின. அவர்கள்தம் வாழ்வை மேற்கொள்ள சிறுகுடில்களை அமைத்தனர். அவை குரம்பை எனப்பட்டன. அக்குரம்பைகள் கழிகளால் கட்டப்பட்டும் வரகுக்கற்றையால் வேயப்பட்டும் இருந்தன. அக்குரம்பையுள் நுழைய சிறுவாயில் இருந்தன. குரம்பையைக் கூரைத் தாங்கி நிற்கக் கால்கள் அமைக்கப்பட்டிருந்தன. அக்கால்களில் ஆட்டுக்குட்டிகள் கட்டப்பட்டிருந்தன **(பெரும்.பா.வரி : 147-154)** என்பதனை பெரும்பாணாற்றுப்படைக் குறிப்பிடுகிறது.

மேலும், பாதுகாப்பு அரணாக முள்வேலிகள் அமைத்திருந்தனர். சிலர் மண்ணால் ஆகிய சிறிய பாதுகாப்பு அரண்களையும் அமைத்திருந்தனர் என்பதை,

**“வெல்போர்க் கவுரியர் நல்நாட்டு உள்ளதை**
**மண்கொள் புற்றத்து அருப்பு உழைதிறப்பின்**
**ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்”** (அகநானூறு: 342)

என்ற வரிகள் விளக்கி நிற்கின்றன. இவ்வாறான குடியிருப்புகளில் ஆயர் குடியாகிய முல்லை மக்கள் வாழ்ந்தனர் என்பது தெரிகிறது.

இருப்பினும், இப்பதிவுகள் பெரிதும் சங்க இலக்கிய முல்லைப்பாடல்களில் இடம்பெறாமல் காட்டின்வழி செல்வோரது காட்சிப் பின்னணிக்காக குறிப்பிடுவதாக அமைகிறது. ஆரம்ப காலத்தில் இவர்கள் நிலைத்த குடியிருப்புகளில் வாழாமற் நாடோடிகளாய் வாழ்ந்ததே இதற்கான காரணமாய் அமையக் கூடும்.

**தொழில்**

கால்நடைகளை மேய்த்தலையே முல்லை மக்கள் தம் தொழிலாக் கொண்டனர். கால்நடைகளே தங்களது உணவுத் தேவையை நிறைவு செய்யும் சக்தியாகவும், பொருளாதார சக்தியாகவும் விளங்கினமையால், இவற்றையே மூலதனமாகக் கொண்டு இம்மக்கள் தொழில் புரிந்தனர் **(முல்லை நிலமும் எல்லைப்போரும் ப : 5)**. ஆக, கால்நடைகளை பாதுகாப்பதும், அதனைப் பெருக்குவதையுமே நோக்கமாகக் கொண்டு இச்சமூக மக்கள் வாழ்ந்தனர். ஆயர் குடிப் பெண்கள் தயிர்த்தோய்க்கும் அழகை,

**“ஆய்மகள் வள்ளுகிர்த் தெறித்த**
**குடப்பால் சில்லுறை”** (புறநானூறு.276)

என்ற வரிகள் வர்ணிக்கின்றன. இவ்வாறு கால்நடைகளைப் பேணி வளர்க்கும் மக்கள் அதன் பயனாகப் பெற்ற பால், தயிர், மோர் மற்றும் இறைச்சி உள்ளிட்டவற்றையே உண்டு வாழ்ந்தனர். ஆகவே, இங்கு உணவுக்கானப் போராட்டம் அதிகமாய் இல்லை. இவ்வாறு முல்லைநில மக்கள் கால்நடைகள் சார்ந்த தொழிலை மேற்கொண்டனர்.

**வாழ்வியல் முறை**

களவின் முடிபு கற்பு என்பது அகத்திணை வலியுறுத்தும் அறம். இக்கற்பே முல்லை நில மக்களிடத்தில் பெரிதும் கடைபிடிக்கப்பட்டது. இக்கற்புக் கோட்பாடு ஓர் ஒழுக்கநெறியைச் சமுதாயத்தில் இடம்பெறச் செய்தது. முல்லை நிலத்தில் கற்பு என்பது தலைவன் தலைவி ஆகிய இருவர்க்கும் இன்றியமையாததாக விளங்கிற்று. இம்மக்களின் இல்லறவாழ்வானது எளிமையும் இனிமையும் பெற்று விளங்கியது.

முல்லை நில மக்களிடம் விரிச்சி கேட்டல், சகுனம் பார்த்தல் முதலிய நம்பிக்கைகள் இருந்துள்ளன. போர் மேற்செல்லும் போதும் சகுனம் பார்த்தே சென்றுள்ளனர். இவ்வாறான சூழலில் தலைவி தலைவனை தடுத்துநிறுத்துவதோ, போருக்குச் செல்லவேண்டாம் என்று கூறுவதோ தீய சகுனமாகப் பார்க்கப்பட்டுள்ளது.

ஆநிரை மீட்புப்போரில் ஈடுபடும் ஆடவர் போருக்குச் செல்லுமுன் இறைவழிபாடு செய்துள்ளனர். மேலும், எல்லாச் செயலுக்கும் தெய்வம் பரவுவர் என்ற கருத்தை **தமிழ்க்காதல் (ப.எ :149)** பதிவு செய்துள்ளது. இதுபோன்று ஏறுதழுவச் செல்லும் முன்னர் ஆயர்கள் தெய்வ வணக்கம் செலுத்தியதை,

**"தொல் கதிர்த் திகிரியான் பரவுதும்"** (முல்லைக்கலி.104-88)

எனும் முல்லைக்கலி பாடல் வரி வெளிப்படுத்துகிறது.

முல்லை நில மக்கள் கலைகளிலும் சிறந்து விளங்கினர். ஏனெனில், பண்ணும் பாடலும் தோன்றி வளர்ந்த இடமாக முல்லை நிலம் கருதப்பட்டது. ஆயன் குழல் இசைப்பதிலே வல்லவனாகத் திகழ்ந்தான். இவ்வினிய இசைகேட்டு கால்நடைகள் ஆயர்களை விட்டு விலகிச்செல்லாது இருக்கும். மேலும், பொழுதுபோக்கிற்காகவும் ஆயர்கள் குழலிசைத்தனர். இசையோடு கூடிய கூத்துக்கலையும் இங்கு வளர்ந்துள்ளது. ஏறுதழுவல் முடிந்த பின்னர். வெற்றி பெற்றோர் குரவைக் கூத்து நிகழ்த்தியுள்ளனர் என்பதை,

**"பண்ணமை இன்சீர்க் குரவையுள், தெண்கண்ணித்**
**திண்தோள், திறல் ஒளி, மாயப்போர், மாமேனி**
**அந்துவர் ஆடைப் பொதுவனோடு, ஆய்ந்த**
**முறுவலாள் மென்தோள் பாராட்டிப் சிறுகுடி**
**மன்றம் பரந்தது"** (முல்லைக்கலி, பா:102 : 35-39)

இப்பாடல் வரிகள் காட்டுகின்றன. இவ்வாறு இயற்கையோடு கூடிய எதார்த்த வாழ்வியல் முறையை வாழ்ந்தனர் முல்லைக்குடிகள்.

**முல்லைக்கலி**

அகப்பொருட்கண் இடம்பெறும் பாடல்கள் அனைத்தும் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர் ஆகிய யாரேனும் ஒருவரது கூற்றாய் அமைய, முல்லைக்கலிப் பாடல்கள் உரையாடல்களாகவே அமைகின்றன. உதாரணமாக,

**“…………. வனமுலையாய்! மற்றுநின்**
**கையது எவன், மற்று உரை”** (முல்லைக்கலி.17, 4-7)

எனத் தலைவன் கேட்க, அதற்குத் தலைவி

**“மாதர் புலைத்தி விலையாகச் செய்தது ஓர்**
**போழின் புனைந்த வரிப்புட்டில்”** (முல்லைக்கலி.17, 7-8)

என பதில் கூறுவதாக அமைகிறது. இதனால் அகப்பொருட் பாடல்களில் எதார்த்த நிலையை முல்லைக்கலியே பதிவு செய்துள்ளது எனலாம்.

அடுத்து, திருமணமுறையில் இவர்களுக்கென உள்ள தனித்துவமான ஏறுதழுவல் என்பது. ஆயர்குல குடும்பத்தில் பிறந்த பெண்ணோடு கற்பு வாழ்வில் ஈடுபடவேண்டுமாயின் ஏறுதழுவலில் தன்வீரத்தை ஊரார் அறிய வெளிப்படுத்தியேத் தீரவேண்டும். ஆயர்குலப் பெண்ணால் வளர்க்கப்பட்ட காளையை அடக்கி தன் வீரத்தை நிரூபித்த ஆண்மகனையே ஆயர்குலப் பெண் விரும்புவாள். இத்தகைய முறையை முல்லைக்கலி தவிர வேறெந்த முல்லைப்பாடல்களும் பதிவுசெய்யவில்லை. உதாரணமாக,

**குரூஉக்கண் கொலையேறு கொள்வான் – வரிக்குழை**
**வேய்உறழ் மென்தோள் துயில்பெறும், வெந்துப்பின்**
**சேஎய் சின் அஞ்சான் சார்பவன்”** (முல்லைக்கலி.4, 23-25)

இப்பாடல்வரிகள் காளையை அடக்குபவனே இப்பெண்ணைப் பெறுவான் என ஊரார் அறிவித்ததை வெளிப்படுத்துகின்றன.

தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் சங்கப்பாக்கள் இயற்றியமைக்கான இலக்கணத்தை எடுத்தியம்புகிறது. அதனோடு அக்கால மக்கள் குறித்த புரிதலையும் ஏற்படுத்துகிறது எனலாம். இருப்பினும் மக்களது வரலாறு என்பது சீழ்க்கை ஒலியில் தொடங்கிய மொழியை சரிவர பேசாத ஆதிமக்களிடத்திருந்து தோன்றியது. ஆதலால், தொல்காப்பியத்தை வைத்து மட்டுமே சங்கப்பாக்களைப் பொருத்துவது சரியான ஆராய்ச்சி ஆகாது என்பதற்கு முல்லைப்பாடல்களே சான்று. இன்றும் ஆயர் எனும் சமூகப் பழங்குடிகள் இந்திய ஆப்பிரிக்க நாடுகளில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். நாகரீக வளர்ச்சி பெற்றிருப்பினும் அவர்களின் பண்பாடுகளில் பெரிதும் மாற்றங்கள் இல்லை என்பது நாம் அறிந்த ஒன்றே.

அவ்வகையில் நோக்கின் முல்லைநிலப்பண்பாடு அல்லது அம்மக்கள் குறித்த செய்திகள் அனைத்து திணைப்பாக்களிலும் விரவிக் காணப்படுகின்றன. ஆதலால், ஆயர் குறித்த வர்ணனைகள் வெறும் காட்சிப் பின்னணிக்காக பாடல்களில் வலிந்தும் தேவைகருதியும் வருகின்றனவே தவிர முல்லைச் சமூகப் பண்பாடு குறித்து இன்னும் ஆராயவேண்டியது இன்றியமையாததாகிறது என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

**முடிவுரை**

தொல்காப்பியம் குறிப்பிடும் முல்லை நிலப்பண்பாடு சங்கப்பாக்களில் இடம்பெறும் முல்லை நிலப்பாக்களுக்குப் பெரிதும் பொருந்துவதாக இல்லை. பெரும்பான்மை தலைவியை விட்டு நீங்கி, போர்குறித்தோ அல்லது பொருள் ஈட்டவோ சென்ற தலைவனை எண்ணிக் காத்திருந்ததாகவே பெரிதும் அமைகின்றன. மாறாக, முல்லைக்கலிப் பாடல்களே அச்சமூக மக்களின் பண்பாட்டினை தெளிவுறுத்துகிறது என்பது இக்கட்டுரையின் வாயிலாகப் பெறப்படும் உண்மையாகும்.

**துணைநின்ற நூல்கள்**


1. அனந்தராமையா.இ.வை, **கலித்தொகை முல்லைக்கலி (நச்சினாரக்கினியர் மூலமும் உரையும்)**, தமிழ்ப்பல்கலைக்கழகம்,1984.
2. இராசமாணிக்கனார்.மா, **பத்துப்பாட்டு ஆராய்ச்சி**, சென்னைப் பல்கலைக்கழகம், 1970.
3. செல்வராசு, **முல்லைநிலமும் எல்லைப்போரும்**, எழில், 2004.
4. நச்சினார்க்கினியர், **தொல்காப்பியம்**, கழக வெளியீடு, 1970.
5. துரைசாமிப்பிள்ளை.சு.ஔவை, **நற்றிணை**, அருணா பப்ளிகேஷன்ஸ், 1968.
6. துரைசாமிப்பிள்ளை.சு.ஔவை, **புறநானூறு**, கழக வெளியீடு, 1960.
7. மாணிக்கம்.வ.சுப, தமிழ்க்காதல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2012.
8. வேங்கடசாமி நாட்டார்.ந.மு, ரா.வேங்கடாசரம்பிள்ளை, **அகநானூறு**, கழக வெளியீடு, 1960.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**புவனேஸ்வரி, மூ. “ இலக்கணம் பிறழா இலக்கியம் முல்லைக்கலி ”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 2, ஜூலை 2021, பக். 11-16


Cite this Article in English


**Bhuvaneswari, M. “ Invariable grammatical elements of literature in Mullaikali ”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 2, July 2021, pp. 11-16

# உடலரசியல் நோக்கில் தமிழவனின் 'ஷம்பாலா'

# Tamilavan's Sambala in Physiological Perspectives

முனைவர் ராஜா இரா, நாமக்கல்.

Dr Raja R, Namakkal.

DOI:10.5281/zenodo.5105828

**Abstract**

"Physiology is the politics of talking about how a body is structured by the power structure and how to recover or escape from it." The novel Shambhala by Tamilvan is based on this. This article sets out on a journey based on this.

**Keywords உடலரசியல் , பாசிசம், மொழி**

## முன்னுரை

"உடலரசியல் என்பது ஒரு உடல் எப்படி அதிகார அமைப்பால் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதையும் அதிலிருந்து அவ்வுடலை எப்படி மீட்டெடுப்பது அல்லது தப்பிச் செல்வது என்பதையும் பேசுபொருளாகக் கொண்ட அரசியலே ஆகும்." தமிழவனின் ஷம்பாலா எனும் நாவல் இதனடிப்படையில் அமையப்பெற்றது. இது சார்ந்த பயணமாக இக்கட்டுரை அமைகிறது.

## நாவல் அறிமுகம்

'ஷம்பாலா' நாவல் 'ஓர் அரசியல் நாவல்' என்னும் துணைத்தலைப்புடன் தமிழவன் அவர்களால் எழுதப்பட்டு 2019-ல் வெளிவந்துள்ளது. இந்நாவல் இரண்டுவகைக் கதைப்போக்குகளைக் கொண்டது. ஒன்று : நடுத்தர வயதுடைய, தனது மனைவி மற்றும் ஒரே மகளான அமரியுடன் அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்துவருகிற தனது சிந்தனையை இலக்கியத்தின்வழி வெளிப்படுத்துவதும் சொற்பொழிவாற்றுவதுமாகிய பணியைத் தொடர்ந்து செய்கிற அமர்நாத் என்பவர், அரசாங்கத்தின் ஆணைக்கிணங்க சிந்தனைக் காவலர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதும் கட்டுப்படுத்தப்படுவதும். இரண்டு: சிந்தனைக் காவலர்களால் கண்காணிக்கப்படுகிற, கட்டுப்படுத்தப்படுகிற அமர்நாத் மனதில் தோன்றுகிற ஒரு சொல்லான, ' ஹிட்லர்' என்னும் சொல் தனித்த கதையாக எழுதப்படுவது. அந்தக் கதை ஒரு ஹிட்லர் எப்படி உருவாகிறான் அல்லது உருவாக்கப்படுகிறான் என்பதை எழுதிப்பார்க்கிற ஒரு கதை. இரண்டு கதைகளும் அடுத்தடுத்த இயல்களில் மாறி மாறி எழுதப்பட்டு இறுதி இயலில் ஒன்றாக்கப்படுகிறது.

ஒரு முற்றதிகார பாசிச கொடுங்கோன்மை அரசு உருவானால், உருவாவது தடுக்க முடியாமல் போனால் அது தனக்கு எதிரான சிந்தனைகளை இல்லாமல் அழித்துவிடும். அவ்வாறு

அழிப்பதற்கு பாசிச அரசு எந்த எல்லைக்கு வேண்டுமானாலும் செல்லும் என்பதற்குச் சான்று : " ' சட்டை போட சோதனை. சட்டையைக் கழற்ற சோதனை, எல்லாத்துக்கும் சோதனைதான்' " (ஷம்பாலா, 2019:11), "காவலன், கழுவப்படாத கழிப்பறைக்குள் போய் நின்றான். கையில் ஒரு டைரியில் பல குறிப்புக்கள் எடுத்தான்." (ஷம்பாலா, 2019:13). அமர்நாத் அவரது மகள் அமரியுடன் இருக்கும்போதே, அமரி காணவில்லை என்று புகார் செய்துள்ளீர்கள். நாங்கள் கண்டுபிடித்துத் தருகிறோம் (135) என்று கூறி நடக்காத ஒரு செயலை நடந்ததாகக் கூறி இயல்பு வாழ்க்கையை அழித்தல். இயல்பு வாழ்க்கையை அழித்தலின் நோக்கம் அமர்நாத்தைப் பாசிச அரசுக்கு எதிரான சிந்தனைச் செயல்பாட்டிலிருந்து விடுபடச் செய்வது. இவ்வாறு பாசிச அரசு உருவாவதும், உருவானால் எப்படிச் செயல்படும் என்பதையும் புனைவு வெளியில் எழுதிப்பார்க்கப்பட்ட கதையே இந்நாவல்.

**கருதுகோள்**

இங்கு நமக்கு எழும் கேள்வி : பாசிச அரசின் சிந்தனைக் காவலர்களால் கண்காணிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்படும் சனநாயக சிந்தனை கொண்ட அமர்நாத் ஒரு கதையை அதுவும் பாசிச அரசு உருவாக்கப் பின்னணியை ஆராயும் கதையை எழுதும் முரணை எப்படிப் புரிந்துகொள்வது என்பதே. அதாவது, அமர்நாத்தின் சொற்கள் கட்டுப்படுத்தப்படும் சூழலில் அதற்கு முரணாக அதே சொற்களைக் கொண்டு நாவல் எழுதப்பட்டிருப்பது ஏன்? இதற்கு ஒரு தற்காலிக விடையை உருவாக்கிக்கொண்டு கட்டுரைக்குள் பயணிப்போம். விடை: சிந்தனைக் காவலர்களால் கண்காணிக்கப்படுகிற, கட்டுப்படுத்தப்படுகிற ஒரு தன்னிலை அந்தக் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறும் முயற்சியே கண்காணிக்கப்படுகிற அரசு உருவாக்கப் பின்னணியை எழுதிப்பார்க்கிற ஹிட்லர் கதை. இம்முரணை ஆராய்வதற்கு அதிகாரத்தால் ஒரு உடல் கட்டப்படுவதும் அதிலிருந்து வெளியேறிச் செல்வதுமான ஒரு உடலையும் பேசுபொருளாகக் கொண்ட உடலரசியல் சிந்தனை பொருத்தமாக இருக்கும் என்பதால் உடலரசியல் சிந்தனையை ஆய்வுக் கருவியாகக் கொண்டு இவ் ஆய்வு நிகழ்த்தப்படுகிறது.

**மொழிசார் அமைப்பியல் சிந்தனை**

சொற்களுக்கு எதிராகச் சொற்களே செயல்படுவது ஏன் என்றால் சொற்களுக்கான மாற்று ஆயுதமும் சொற்களே. ஒவ்வொரு மனித மன அமைப்பும் மொழியால் ஆனது. ஒன்றை ஏற்பதும், மாற்றியமைத்தலும் எல்லாமே மொழி வழியேதான் நிகழ்த்த முடியும். இதனை, "மொழி எதையெல்லாம் உற்பத்தி செய்கிறதோ, அவை எல்லாமே மொழிவடிவில் மட்டுமே இருப்பவை … ஒரு உடலிலிருந்து கிளைத்துப் பரவும் மொழியானது, அவ்வுடலிற்குள் நிகழ்த்தும் குறித்தலால், அவ்வுடலை மறு உருவாக்கம் செய்வதுடன், அம்மொழி பிறிதொரு உடலை

தொடர்புகொள்ளும்போது, அவ்வுடலிற்குள்ளும் குறித்தலை நிகழ்த்தி அவ்வுடலையும் மறு உருவாக்கம் செய்கிறது” (ஜமாலன், 2020:32-33) என்னும் விளக்கத்தின்வழி மொழியின் குணங்களை அறிய முடியும்.

இங்குப் பள்ளி, கல்லூரிகளில் மொழிப்பாடம் என்று தாய்மொழியைக் கற்றுக்கொள்கிறார்கள். மொழி ஒரு கருத்துப் பரிமாற்றுக் கருவியாகப் பார்க்கப்படுகிற சமூகத்தில் மொழிப்பாடமும் அவ்வாறே கற்றுக்கொடுக்கப்படுகிறது. இங்கெல்லாம் அமைப்பியல் சிந்தனை பரவவில்லை என்பதனையே காட்டுகிறது. அமைப்பியல் ஒவ்வொரு மனிதனின் மன அமைப்பும் மொழியால் ஆனது என்கிறது. மன அமைப்பு உருவாவது என்பது குழந்தை பிறந்து அது சமூகத்துடன் உறவுகொள்ளும்போதே நிகழ்வது. மொழியால் உருவாகிய மன அமைப்பு மொழியால்தானே செயல்பட முடியும். அத்தகைய மொழி இல்லையானால் மனித உயிர், உடல் ஆகியவை இருக்கும், ஆனால் அந்த மனித உயிர் சமூக உயிரியாக இருக்க முடியாது. ஒரு மனித உயிர் சமூக உயிரியாக ஆவதும் வாழ்வதும் சாவதும் மொழியால்தான் எனும்போது மொழி ஒரு பரிமாற்றுக்கருவி என்னும் சிந்தனை அழிந்துவிடுகிறது. மனிதத் தன்னிலைமையும் கூட உள்ளே பிளவுபட்டு இரண்டாக நின்று தங்களுக்குள் மொழிவழியாகத்தான் உரையாடிக்கொள்கிறது. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் தலைவன் தன் நெஞ்சுக்குரைத்தல் கூற்று, நாட்டார் வழக்காறான மனசாட்சியோடு பேசுதல் ஆகியவை சான்றுகள். அமைப்பியல் சிந்தனை பரவாததால்தான் மொழியைப் பரிமாற்றுக் கருவியாகப் பள்ளி, கல்லூரிகளில் பாடம் நடத்திக்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாது மனித இயக்கத்திற்குக் காரணமான தாய்மொழியை மூன்றாம் நிலைப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்நாவல் அமைப்பியல் சிந்தனையை உள்வாங்கி எழுதப்பட்ட ஒரு நாவல்.

**கதைக்களம்**

அமர்நாத் வாழக்கூடிய சமூகம் நாட்டுப்பற்று என்னும் பெயரில் அறிவுக்குப் பொருந்தாத பழமையின் அடிப்படையில் இனவாத செயல்களை மேற்கொள்வது (58), ஆட்சியில் இருப்பவர்களைக் கேள்வி கேட்காத மனநிலையை உருவாக்க சிந்தனைக் காவலர்களைப் பயன்படுத்துவது (59), கூடவே இருப்பவர்களை இல்லாதவர்களாகச் சுட்டி, காணாமல் ஆக்கப்பட்டு விடுவார்களோ என்னும் அச்சத்தை உரியவர்களிடம் விதைப்பது (135), ஆட்சிக்குச் சார்பான வலதுசாரி சினிமா எழுத்தாளர்கள் சுதந்திரமாக இயங்குவது (94-99), குறிப்பிட்ட மக்களுக்குத் தேவையான தற்காலிக, உடனடி உதவிகளைச் செய்து பெரும்பான்மை மக்களை அவர்களது அறியாமையை உணர்வுகளில் சிக்கவைத்து தனது அரசியலுடன் இணைத்துக்கொள்வது (184-185), சிறுபான்மையான கிறித்துவர்களை பெரும்பான்மைவாதத்தின் அடிப்படையில் ஈர்க்கச்செய்து இந்துவாக மாற்றித் தங்களது குற்றங்களுக்குப்

பயன்படுத்திக்கொள்வது (183-190), சிறுபான்மையான முஸ்லீம் இந்துப் பெரும்பான்மை அரசியலை ஏற்கும் மனநிலையை உருவாக்குவது (102), தலித்துகளைக் கூட்டமாக இருந்து செயல்படும் சிந்தனை அடிப்படையில் இந்துப் பெரும்பான்மைவாதத்தை ஏற்கவைப்பது (43), இந்து நடுநிலைவாதிகளும் இந்து சார்புநிலை எடுப்பது, மனித இறப்பை இந்து – முஸ்லீமாகப் பார்ப்பது (125-135), இராமாயணத்தைப் படிப்பவனையும் முற்போக்கு இலக்கியத்தை ஏற்பவனையும் அரசு எந்திரம் காவல்துறை என்ற பெயரில் ஒருநிலைப்படுத்தி அரசுக்குச் சார்பாகச் செயல்பட வைப்பது (150-156) சிந்தனைவாதிகளைக் கண்காணிப்பதற்கு சிந்தனைவாதிகளின் சிந்தனைகளை அறிந்தவனை, அந்த மரபில் வந்தவனை பணியில் அமர்த்துவது (150 -151), மதச்சார்பான ஓர் அரசு மொத்தத்தில் எல்லோரையும், ஏன் எதிர்க்கட்சிக்காரர்களையும் மத அடிப்படையில் சிந்திப்பவராகவும் செயல்படுபவராகவும் மாற்றுவது (152) ஆகிய பலவழிகளில் இந்துமத அடிப்படைவாத, பெரும்பான்மைவாத பாசிச உருவாக்க சமூகமாக இருக்கிறது.

இந்துமத அடிப்படைவாதக் கூறுகளை, அரசாங்க செயல்பாடுகளை நிராகரிக்கிற செயல்களும் ஆங்காங்கே உண்டு. சான்றாக பணமதிப்பிழப்பை நிராகரிக்கிற பழங்குடி மக்கள் (72), இவையெல்லாம் மிகவும் சிறுபான்மை அளவில் நிகழ்பவை; மைய நீரோட்டத்திற்கு வராதவை. சமண மதத்தைப் பின்பற்றும் ஒருவர், விருப்பத்தின் அடிப்படையில் கிறித்துவ மதத்திலிருந்து இந்து மதத்திற்கு மாறியவனைக் கல்வி கொடுத்து மனிதனாக மாற்றுவது (190-191), புத்தகங்களை உருவாக்கும் மனங்களை அழிக்க முனையும் சக்திகளிடமிருந்து புத்தகங்களைக் காப்பாற்ற முனையும் இளைஞன் (192), இடதுசாரிச் சிந்தனையைப் பரப்பும் பேராசிரியர் சுரேஷ், அமர்நாத் ஆகியோர் வலதுசாரி அரசியல் குறித்துத் தொடர்ந்து உரையாடுவது. இவற்றையும் தனது அதிகாரத்தின்வழித் தன்வயப்படுத்தும் அரசு என்பதனை, "புத்தகங்களை அழிப்பதற்கு பதில் புத்தகங்களை உருவாக்கும் மனங்களை இன்று ஆட்சியில் இருப்பவர்கள் அழிக்க விரும்புவதைத் தெரிந்துகொண்டேன்" (ஷம்பாலா, 2019:192) என்னும் உரையாடல் உணர்த்துகிறது. தனது அரசுக்கு எதிரான செயல்களை எவ்வழியிலேனும் அழிக்கத் துடிக்கும் ஒரு அரசு சனநாயகத்திற்கு எதிரான பாசிச அரசாகும்.

**அமர்நாத் - பாத்திரப்படைப்பு**

அமர்நாத், வெளிநாட்டில் படித்தவர், வெளிநாடுகள், பெரிய பல்கலைக்கழகங்களில் எல்லாம் சொற்பொழிவாற்றுபவர், ஆங்கில, தேசிய நாளேடுகளில் எழுதிவருபவர் (97); நூல்கள், கட்டுரைகள், நாவல்கள் எழுதுபவர் (19); மேற்குலக தத்துவ அறிதலை உடையவர், இடதுசாரி சிந்தனை தளத்தில் இயங்குபவர் (103), தனது மகள் அமரியை வெளிப்படைத்தன்மையோடு பகுத்தறிவுடன் வளர்ப்பவர். இச்செயல்கள் அடிப்படையில் அமர்நாத் அடிமைச் சிந்தனையோ,

ஏகாதிபத்திய சிந்தனையோ, தேசியச் சிந்தனையோ, இனச் சிந்தனையோ, சாதியச் சிந்தனையோ, மதச் சிந்தனையோ, பழமைவாத சிந்தனையோ இல்லாதவர் என்றும் சனங்களின் பக்கம் நின்று அறிவின் துணைகொண்டு இயங்குபவர் என்றும் அறிந்துகொள்ள முடிகிறது. இது அதிகாரத்தால் கட்டமைக்கப்பட்ட உடல் அன்று. மாறாக விருப்பத்தின் அடிப்படையில் அறிவின் துணையால் இடதுசாரி சனநாயகக் கருத்தியலை ஏற்றுக்கொண்ட ஓர் உடல் என்ற அமர்நாத்தின் கருத்தியல் சார்ந்த உடலைப் புரிந்துகொள்ளலாம். இந்த உடல் முன்வைக்கும் கருத்தியல் வலதுசாரி மதவாதப் பாசிச அரசியலைக் கட்டமைக்கத் துடிக்கும் அரசுக்கு எதிரானது. எனவேதான், இக்கருத்தியலை ஒடுக்கச் சிந்தனைக் காவலர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

சிந்தனைக் காவலர்கள் அமர்நாத்தின் சொற்களை ஆராய்கிறார்கள். ஏன் அவர்கள் சொற்களை ஆராயவேண்டும்? சொற்களின் வழிதான் சிந்தனைகள் உருவாக்கப்படுகின்றன. அமர்நாத் உருவாக்கும் இடதுசாரி சனநாயகச் சிந்தனை வலதுசாரி பாசிச உருவாக்கத்திற்கு எதிரானது. எனவேதான் அவர்கள் அமர்நாத் உருவாக்கிய சொற்களில் வலதுசாரி பாசிச அரசுக்கு எதிரான சொற்களைத் தேடுகின்றனர். இத்தேடுதல் பணியில் சிந்தனைக் காவலர்களால் அமர்நாத் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார். கண்காணிக்கப்படுவதால் அமர்நாத்தின் மனம் குழம்புகிறது. காரணம் அவர்கள் உண்மையிலே சிந்தனைக் காவலர்கள்தான் என்பதற்கான ஆதாரம் அவர்களால் காட்டப்படவில்லை. அதை அமர்நாத்தால் உறுதிப்படுத்தவும் இயலவில்லை. அடுத்து வேறுவகைப்பட்ட சிந்தனைக் காவலர்கள் வருகின்றனர். அதற்கு இடையில் அமர்நாத்திடம், " ' உங்கள் மகள் பெயர் அமரி. அவளைக் காணவில்லை என்று கம்பளெயிண்ட் கொடுத்துள்ளீர்கள். அதனைத் தேட எல்லா முயற்சியும் மேற்கொண்டுள்ளோம். காவலர் எப்பொழுது அழைத்தாலும் நீங்கள் வந்து ஒத்துழைக்க வேண்டும்' என்றது குரல். அமர்நாத் கோபமாய் 'நான் கம்பளெயிண்ட் கொடுக்கவில்லை. என் மகள் சுகமாக இருக்கிறாள்' என்றபோது அந்தத் தொலைபேசிக் குரல் கண்டுகொள்ளவில்லை" (ஷம்பாலா, 2019:135). என்று காவலர்கள் உரையாடுகின்றனர்.

ஏற்கெனவே சிந்தனைக் காவலர்களால் மனம் குழம்பிப்போய் இருக்கும் அமர்நாத்துக்கு மகள் இருக்கும்போதே காணவில்லை என்று கூறுவது மேலும் மன உளைச்சலைத் தந்தது. அடுத்தது உயரதிகாரிகள் என்று கூறிக்கொண்டு வேறுவகைச் சிந்தனைக் காவலர்கள் வந்தார்கள். அவர்கள் தங்களது பணியாக, "உங்கள் மனம் எப்படிச் செயல்படுகிறது என்பதை அறிய உங்களது புத்தகங்களை எல்லாம் வாங்கி வைத்துச் சொற்களை வகைப்படுத்தி ஆய்வு செய்வோம். அதற்குச் ' சொல் தொகுப்பு ஆய்வு' என்று பெயர்" எனக் கூறுகின்றனர். சிந்தனைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோரின் நெருக்கடியால் அமர்நாத், "என்ன முடிவு எடுக்க வேண்டும் என்று மனது தீர்மானத்துக்கு வரவில்லை. தன் கையிடுக்கு ரோமம் பற்றிய சிந்தனைக்குச் சிந்தனைப் போலிஸ்

என்ன நினைக்கும்?" (ஷம்பாலா, 2019:124) என்று பதட்டமடைந்து பேசுவதைக் கவனிக்க முடிகிறது. கையிடுக்கு ரோமம் பற்றியெல்லாம் அமர்நாத்தை யோசிக்க வைத்து மனக்குழப்பத்திற்கு ஆளாக்கும் அளவிற்குச் சிந்தனைக் காவலர்களின் அதிகாரச் செயல்பாடு உள்ளது. மேலும், கையிடுக்கு ரோமத்தைக் கூட ஓர் அரசு தனது கட்டுப்பாட்டுக்குக் கீழ்க்கொண்டு வரலாம் என்ற செயல், பகடித் தன்மையாகத் தோற்றம் தந்தாலும் ஒரு பாசிச அரசு எந்த அளவிற்கு வேண்டுமானாலும் செல்லும் என்பதற்கான சான்று. அமர்நாத் அடைந்திருக்கிற குழப்பத்தின் வழிக் கொஞ்சம் கொஞ்சமாக பாசிச அரசு அமர்நாத் ஏற்றுக்கொண்டிருக்கிற சனநாயக உடலை அழித்துக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. அமர்நாத்தின் எந்த முடிவும் எடுக்க முடியாத நிலை பாசிச அதிகாரத்தின் வெற்றியின் அடையாளம்.

அமர்நாத் சிந்தனைக் காவலர்களால் மனக்குழப்பம் அடைந்தாலும் முழு முற்றாக முற்றதிகார சூழலுக்குத் தன்னை ஒப்படைக்கவில்லை. இதனைச் சிந்தனைக் காவலர்களின் செயல்கள் குறித்து தனது நண்பர் சுரேஷூடன் தொடர்ச்சியாக உரையாடுவதன் வழியும் (42-44, 101-107, 193-194), தனது அண்ணன் வாயிலாகப் பணமதிப்பிழப்பை ஏற்காத பழங்குடிகள் குறித்து அறிந்துகொள்வதன்வழியும் (64-73), பாசிச செயல்பாடுகளுக்கு எதிராக சனநாயகக் கருத்தியல் துணைகொண்டு தனது தன்னிலையோடு அமர்நாத் தொடர்ந்து உரையாடிக்கொள்வதன்வழியும் (23), அமர்நாத்தின் மகள் அமரி அமர்நாத்தைக் குழப்பத்திலிருந்துத் தெளிவிப்பதன் வழியும் (196-199) ஹிட்லர் என்னும் நாவலை எழுதியதன் வழியும் 213-214) அறிந்துகொள்ள முடிகிறது. இவற்றில் குழந்தை அமரியின் செயலும் ஹிட்லர் என்னும் புனைவுச் செயலும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தது. காரணம் குழந்தை அமரி எந்தச் சிந்தனையின் தாக்கத்திற்கும் அச்சத்திற்கும் ஆளாகாத உயிரி. மேலும், அவள் பகுத்தறிவுடன் சுதந்திரமாக எந்த ஒளிவுமறைவுமின்றி வளர்க்கப்பட்டவள். ஆகையால்தான் குழந்தை அமரியால் அமர்நாத் பாசிச உடலுக்குக் கீழ்ப்படிதலில் இருந்து விடுவிக்கப்படுகிறார். எந்தக் கருத்தியலுக்கும் ஆட்படாத உயிரி அதிகாரத்திற்கு எதிராக வினையாற்றவோ அல்லது அதிகாரத்திற்கு ஆட்பட்ட உடலை எளிதில் வெளிக்கொண்டு வரவோ முடியும். ஏனெனில், அதிகாரத்தைக் குறித்த அச்சம் அங்கில்லை. அமர்நாத் அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தனது உடலை வெளியேற்றியதைத் தனது நண்பர் சுரேஷ் கைது செய்யப்பட்டபோது, அதை எதிர்கொள்ளும் மனநிலைக்கு அமர்நாத் தயாராகிவிடுவதன்வழி (214) அறிய முடிகிறது.

அமர்நாத் பாசிச அதிகாரக் கட்டமைப்புக்குத் தனது உடலைப் பலிகொடுக்காமல் தொடர்ந்து அதனோடு போராடி வருவதே ஷம்பாலா. பாசிசம் தனது முகத்தைக் காட்டத் தொடங்கும்போதே எழுத்தாளன் பாசிசத்திற்கு எதிரான தனது முகத்தைக் காட்டத்தொடங்கி

விடுகிறான். சொற்களை ஆராயும் பாசிச அரசின் கண்காணிப்பை மீறி சொற்கள் உருவாக்கத்தைத் தடுக்கும் செயலுக்கு முரணாக அமர்நாத்தால் எப்படி மற்றொரு கதை எழுதப்பட்டது. அது அதிகாரத்தின் கண்களில் படவில்லையா என்னும் கேள்வி எழுகிறது. அந்தக் கேள்விக்கு நேரடியாக நாவலில் விடை இல்லை. அவ்வாறு பதில் சொல்லப்படாததன்வழி ஒரு பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அஃது அதிகாரத்தின் கண்களில் படாமல் அல்லது ஏமாற்றி அதிகாரத்திற்கு எதிராக வினையாற்ற முடியும் என்பது. இதுவே அதிகாரக் கட்டமைப்பில் சிக்காமல் தப்பித்துக்கொள்ளும் செயல்தான். அப்படியொரு சாத்தியம் இருப்பதை நாவல் மறைமுகமாகச் சுட்டுகிறது. மேலோட்டமாகப் பார்த்தால் ஹிட்லர் கதை அமர்நாத் பாதிக்கப்படுவதோடு நேரடித் தொடர்பற்ற கதையாடலாக தோன்றும்.

**ஹிட்லர் – ஹிட்லர் கதைத்தொடர்பு**

உண்மையில், ஹிட்லர் கதையில் ஜெர்மானிய ஹிட்லருக்கும் இந்த ஹிட்லருக்கும் தொடர்பில்லை என்று கூறுவதன்வழியும் கதையில் மூன்று ஹிட்லர் பற்றி இடம்பெற்றிருப்பதன்வழியும் ஹிட்லர் எப்படி உருவாகிறான் என்பதை விளக்குவதன்வழியும் ஹிட்லர் என்னும் குறிப்பானுக்கான 'வேரை' அடையாளம் காட்டுகிற முயற்சியில் குடும்பம், கல்வி நிறுவனம், மன உளவியல், காவல்துறை, அரசியல் துறை, இறையியில் துறை போன்ற அமைப்புகளின் பங்கை ஆராய்வதன்வழியும் எதிர்காலத்தில் சமூகத்தில் ஹிட்லர்கள் உருவாகினால் அதை அடையாளம் கண்டு அழிப்பதற்கான சாத்தியக்கூறுகளை நாவல் நிகழ்த்திக்காட்டுகிறது. இந்நிகழ்த்துதல் அமர்நாத் தன்னை, தனது உடலைப் பாசிச அதிகாரக் கட்டமைப்பில் இருந்து வெளியேறும் வகையில் செய்யப்பட்ட ஒன்றாகும். அமர்நாத், "ஒரு புனைவுப் பாத்திரம் தோன்றி அதற்கேற்ற பிற பாத்திரங்களுடன் முழுக்கதையாய் உருக்கொண்டதன் நோக்கமென்ன என்று கேட்டுப்பார்த்தபோது ஏதும் மனதில் தென்படவில்லை. எனினும், ஓர் அழுத்தத்திலிருந்து இப்போது விடுபட்டுள்ளார்" (ஷம்பாலா, 2019:213). இதன்மூலம் கதை எழுதுவதற்கு நோக்கம் தேவையில்லை. மாறாக, கதை எழுதுவதற்கு ஒரு மன அழுத்தம் இருந்தால் போதுமானது என்னும் கருத்து கிடைக்கிறது. அந்த அழுத்தம் வருவதற்கு அமர்நாத்தின் உடல் அறச்சீற்றத்துடனான சனநாயக உடலாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அமர்நாத்தின் சனநாயக உடல்தான் சுரேஷை நண்பராகப் பெற்றிருக்கிறது; மகளைப் பகுத்தறிவுடன் வளர்த்திருக்கிறது; புத்தக உருவாக்க மனங்களின் அழிவைக் காப்பாற்றுவதற்கு விநாயக் என்னும் இளைஞனை அமர்நாத்தைத் தேடி வரவைத்திருக்கிறது; பழங்குடி மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள வைத்திருக்கிறது; ஹிட்லர் என்னும் நாவலை எழுதியிருக்கிறது. இவையெல்லாம் பாசிச உடல் அமைப்புக்கு எதிராகச் சனநாயக உடல் புறவடிவில் நிகழ்த்திய

சாத்தியங்கள். இவற்றைத் தவிர அகத்தில் தனக்குத்தானே உரையாடல்வழி நிகழ்த்திக்கொண்ட சாத்தியங்களும் உண்டு. அமர்நாத்தின் கலைச் செயலான ஹிட்லர் நாவல் அவருக்குப் பாசிச அதிகாரக் கட்டமைப்பில் இருந்து தப்பிச்செல்வதற்கான தந்திரோபாயமாக இருந்தாலும் கூடவே அது சமூகம் பாசிச அதிகாரக் கட்டமைப்பில் இருந்து தப்பிச்செல்வதற்குக் கலையைத் தெரிவு செய்யலாம் என்னும் வழியைச் சொல்லிக்கொடுக்கிறது. "எந்த எதிர்கால அரசும் கூட கலையைக் கைது செய்ய முடியாது" (ஷம்பாலா, 2019:214). பாசிச அதிகாரத்தை அழிப்பதற்கு இளைஞர் விநாயக் ஒரு யோசனையை அமர்நாத்துக்குத் தருகிறார். அது, "அவர்கள் சார்பில் சிந்தித்தால்தான், அந்தக் கூட்டத்தை நீங்கள் தோற்கடிக்க முடியும்" (ஷம்பாலா, 2019:185) என்பதாகும். அது என்னவென்றால் மக்களுக்கு உடனடியாகத் தேவையானவற்றைச் செய்து தங்களை இலட்சியக்காரர்களாகக் காட்டிக்கொள்வது. இங்கு அமர்நாத்தின் நாவல் எழுதும் செயல்கூட அவர்கள் சார்பில் நிகழ்த்தப்பட்ட ஒன்றுதான்.

**முடிவுரை**

பாசிச அரசு தனக்கு எதிரான சொற்களை அழிக்க முயல, அமர்நாத் அந்தச் சொற்களைக் கொண்டே பாசிச அரசுக்கு எதிராக அதனுடைய வேரை அடையாளப்படுத்துகிற கதையாடலை நிகழ்த்தியுள்ளார். மேலும், அந்த உத்தி வேறொன்றையும் கற்றுக்கொடுக்கிறது. அது புதிதாக ஒன்றைத் தேடிச் செல்லாமல் நம்மிடம் இருக்கும் ஆற்றலையே பாசிச அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தப்பிச்செல்லும் தந்திரோபாயமாக ஆக்கிக்கொள்வது என்பது இக்கட்டுரையின்வழி பெறப்பட்ட உண்மையாகும்.

**துணை நின்ற நூல்கள்**

❖ தமிழவன், 2019: **ஷம்பாலா ஓர் அரசியல் நாவல்**, சிற்றேடு: பெங்களுரு.

❖ ஜமாலன், 2020: **உடலரசியல்**, காலக்குறி : சென்னை.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**இராஜா, இரா " உடலரசியல் நோக்கில் தமிழவனின் 'ஷம்பாலா' "** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 2, ஜூலை 2021, பக். 17-24

**Cite this Article in English**

**Raja, R. " Tamilavan's Sambala in Physiological Perspectives "** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 2, July 2021, pp. 17-24

# வள்ளுவத்தில் மூடநம்பிக்கை எதிர்ப்பியல் சிந்தனைகள்

# Anti-superstious perspectives in Thirukkural

**முனைவர் மா.தினேஷ்வரன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வி.இ.டி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி, திண்டல், ஈரோடு.

**Dr Dineshwaran M** , Assistant Professor, Department of Tamil,
VET Institute of Arts and Science Co-Ed College,Thindal, Erode.

DOI:10.5281/zenodo.5105842

**Abstract**

Valluvam is the identity of Tamil wisdom. By breaking the bound of human knowledge, one who has attained the tribunal wisdom is the one and only Valluvar. Valluvam is the reason behind for being Tamil as the one of the ancient language which stands and shines in world stage. In such high consent, this article analyses the action against the superstitious beliefs.

**ஆய்வுச்சுருக்கம்**

வள்ளுவம் தமிழ் ஞானத்தின் அடையாளம். அறிவின் விரிவு எல்லைகளை கடந்து முற்றறிவு கொண்ட பேரறிஞர் வள்ளுவர். உலக அரங்கில் தமிழ்மொழி தனித்து நிற்பதற்கு வள்ளுவத்தின் பங்களிப்பு முதன்மையானது. அத்தகு உயர்ப்பனுவலில் மூடநம்பிக்கை எதிர்ப்பியல் குறித்த சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

**Keywords**

Superstitious Beliefs – Thirukkural – Valluvar

**முன்னுரை**

மூடநம்பிக்கை என்றால் மூடப்பட்டு வெளிப்படையாகத் தெரியாத நம்பிக்கை. அதாவது காரண காரியம் அறியாமல், விளைவைக் கணிக்காமல் தொன்று தொட்டுவரும் அல்லது பின்பற்றப்படும் வழக்காறு என்று பொருள்படும். மூடநம்பிக்கையை ஆராய்ந்து அது காலப் பொருத்தமுடையதா என்பதை அறிய வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. விளைவைக் கணிக்காமல் பின்பற்றப்படும் மூடநம்பிக்கைகளால் நம் ஆற்றல், நேரம், அறிவு, திறமை அனைத்தும் வீணாகின்றன. மூடநம்பிக்கை என்றால் பொய்யான, போலியான நம்பிக்கை என்று பொருள் அல்ல. ஏன், எதற்கு, எப்படி என்ற ஆய்வு இல்லாமல் நம்பும் நம்பிக்கை அவ்வளவே. அவற்றுள் நன்மையும் இருக்கலாம் தீமையும் இருக்கலாம்.

**மெய்ப்பொருள் காண்பதறிவு**

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்ப தறிவு.** (423)

**எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.** (355)

ஆகியவை முற்றறிவின் சிறப்பை விளக்கும். அறிவு என்பது 1. இயற்கை அறிவு 2. தேர்ந்த அறிவு 3. நுண்மாண் நுழைபுலன் அறிவு 4. உள்ளுணர்வு அறிவு 5. முற்றறிவு என்ற ஐவகை உடையது. இதில் முதல் அறிவு அனைத்துயிர்க்கும் பொது. மற்றவை ஆறாவது அறிவிற்கு மட்டுமே உரித்தானவை. அதிலும் முற்றறிவு என்பது மற்ற அனைத்து அறிவுகளையும் ஒருங்கிணைத்த மேலான அறிவாட்சித்தரம். இந்த அறிவைக்கொண்டே எல்லாவற்றையும் உய்த்து அறிய வேண்டும் என்பது வள்ளுவர் கோட்பாடு. இந்த அறிவில் மூடநம்பிக்கையின் திரை விலக்கப்பட்டு விளக்கம்பெறும்.

**அறிவு எனும் அரண்**

மூடநம்பிக்கை என்பது இருள் சூழ்ந்த நம்பிக்கை, அது அனுபவத்தாலும், ஆராய்ச்சியாலும் விளக்கம் பெற்றும், தெளிந்த நிலையில் முழுமைப்பேறு பெற்றும் அடுத்தடுத்த படிநிலைக்குச் செல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. அதாவது மூடநம்பிக்கைக்கு எதிர்ப்பதம் அறிவுடைமை. வள்ளுவர் அறிவைப் பற்றி பேசிய இடங்களெல்லாம் மூடநம்பிக்கை எதிர்ப்பியல் களங்கள் என்று கொள்வது பொருந்தும். மேலும் குறிப்பாக சமூகத்தில் பற்றிப் படர்ந்திருக்கும் மூடநம்பிக்கைகள்சார் பதிவுகளும் ஆய்வுக்களங்களாகும்.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு** (5)

என்பதன்வழி அறியாமை இருளால் நிகழும் பழவினை, புகுவினை என்ற இருவினையும் இறைநிலைத் தெளிவு உடையவருக்கு இல்லை என்பது புலனாகிறது. விரிந்த அறிவில் பொருள், புகழ், செல்வாக்கு, புலனின்பப் பற்று நீங்கி அன்புநெறியில் வாழ்வோரிடத்தில் தீயவினைப் பதிவு இல்லை என்பது உட்கருத்து.

**பெண்சார் மூடநம்பிக்கைகள்**

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்.** (54)

என்பதன் மூலம் பெண்மைக்கு கற்பின் அவசியத்தை வலியுறுத்துகிறார். இதனால் பெண்களுக்கு மட்டுமே கற்பு உரித்தானது என்ற பாலினச்சார்புடனான மூடநம்பிக்கை உண்டா என்ற கேள்வி எழும். அதற்கு விடையாக வள்ளுவரே

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற வொழுக்கு.** (148)

என்பதன் வழி பதில் தருகிறார். மேலும், பிறனில் விழையாமை என்ற ஒரு அதிகாரத்தையே ஒதுக்கியிருக்கிறார். கற்பு இருபாலர்க்கும் பொது. எவர்க்கும் பொது. கற்பு என்ற சொல் பாலொழுக்கத்தை குறிப்பது. கற்பே ஒழுக்கத்தின் அடித்தளமும், சிகரமும் என்றறிந்த வள்ளுவத்தில் மூடநம்பிக்கைக்கு இடமில்லை.

திருக்குறளில் பெரிய அளவில் மூடநம்பிக்கைசார் குறளாக விவாதிக்கப்பட்டது

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.** (55)

என்ற குறள்.

பெண்ணடிமையும், ஆணாதிக்கமும் விஞ்சிய கருத்தடங்கிய குறளாக விமர்சிக்கப்பட்டது. பாலினச் சமத்துவத்தை பேரறிஞர்கள் ஏற்றுப் போற்றுவர். ஆனால், இங்கு முரண் ஏன்? இலக்கியம் அறிவியல் நடையில் எழுதவேண்டும் என்ற அவசியம் இல்லை. சுவை கருதி புனைவோடு எழுதுவது இலக்கிய அழகு. அப்படி இதைக் கொள்வது பொருந்தும். கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் புரிதல், நம்பிக்கை, மதிப்பு, நேர்மை, அக்கறை, பொறுமை, தியாகம் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதான் இல்வாழ்க்கை சிறக்கும். இதில் இருவருக்கும் பாரபட்சம் இல்லை என்பதை வள்ளுவர் இல்லறம்சார் குறள்களில் பதிவுசெய்துள்ளார்.

**தெளிந்து துணிந்து செய்தல்**

**எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்**
**எண்ணுவ மென்ப திழுக்கு.** (467)

என்பது எந்தவொரு செயலையும் ஆழ்ந்து ஆய்ந்து செய்ய வேண்டும். செயலாக்கத்தின்போது வெற்றி கிடைக்குமா என்ற குழப்பம் கூடாது என்ற பொருண்மையில் உள்ளது. இது மூடநம்பிக்கையில் ஊறிப்போன ஒருவர் அதில் தெளிவு கிடைத்து மாற்றுப்பாதையில் பயணிக்கும்போது, அந்த மூடநம்பிக்கை குறுக்கிட்டு குழப்பத்தை ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று பொருள்கொள்ளலாம்.

**புலால் மறுத்தல்**

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிருந் தொழும்.** (260)

என்பது கொல்லாமை, புலால் உண்ணாமை என்ற கொள்கை உடையவரை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும் என்ற வகையில் பொருள் கொண்டால் கைகளே இல்லாத உயிரினங்கள் உண்டு, தொழும் பழக்கம் அஃறிணைக்கு இல்லை என்பதால் அக்கூற்றில் தர்க்கம் இல்லை என்ற மூடநம்பிக்கை ஆகிவிடும். ஆனால் இதற்கு அவ்வாறு பொருள்கொள்ளாமல் கைகூப்பி புலால் வேண்டாம் என்று மறுப்பவருக்கு எல்லா உயிர்களிடத்திலும் நல்லிணக்கம் ஏற்படும் என்ற வகையில் பொருள் கொண்டால் இந்த நெருடல் நீங்கும்.

**ஊழ்வினைக் கோட்பாடு**

ஒருவர் பெறும் இன்ப துன்பம் அனைத்திற்கும் அவரின் முந்தைய வினைகள் காரணம். அதாவது அவர் செய்த அல்லது அவரின் கருத்தொடர் வழி முந்தையோர் செய்த செயல்கள் காரணம் என்பது ஊழ்வினைக் கோட்பாடு. ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உறுதியாக உண்டு. செயலுக்கு ஏற்ற விளைவு உண்டு. அதாவது நன்மை செய்தால் நன்மை. தீமை செய்தால் தீமை என்பது இயற்கை நியதி. வினைக்கும் விளைவிற்கும் இடையில் கால நீளம் வேறுபடுவதால் இதில் குழப்பம் நேரலாம். ஆனால் முற்றறிவில் இது உண்மை என்பது விளங்கும். மெய்யியலில் இறைஞானத்தில் மேலோங்கியவர்க்கு மட்டுமே நம்பிக்கையின் உள்அர்த்தம் விளங்கும். அவ்வகையில் இந்த ஊழின் வலிமையைச் சுட்டும் பொருட்டு,

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான்முந் துறும்.** (380)

என்று ஊழ்வினைக் கோட்பாட்டை மூடநம்பிக்கை என்று கூறுவார்க்கு பதில் அளிக்கிறார் வள்ளுவர்.

**தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.** (619)

என்பதில் தெய்வத்தால்கூட செய்ய முடியாத செயல்கள் என்று உண்டு என்று குறிப்பிடுகிறார். பிரபஞ்சத்தையே தன் பேரறிவால் பேராற்றலால் நுண்நொடிப்பொழுதும் இடைவிடாது ஒழுங்கமைப்புடன் இயக்க ஒழுங்குடன் ஆளுமைக்குள் வைத்திருக்கும் இறைவனால்கூட முடியாத செயல் ஒன்று இருப்பதாக எப்படி ஏற்க முடியும். கடவுள் நம்பிக்கையே மூடநம்பிக்கை என்று குறிப்பிடுவார் ஒரு புறம். இங்கு கடவுளைத் தவிர வேறொன்றும் இல்லை என்று தெளிந்தவர் மறுபுறம். எப்படியும் கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் வல்லவராகத்தான் இருப்பார். அவரால் ஒரு செயல் முடியாது என்பது அறிவுக்குப் பொருந்தாது. இங்கு இவர் முயற்சியின் பெருமையை உணர்த்தும் பொருட்டு அப்படிக் கூறியிருக்கலாம். மேலும், இறை தனக்குத்தானே வகுத்துக்கொண்ட நியதியை மீறாது. எனவே இது மூடநம்பிக்கை அல்ல என்பது விளங்கும்.

**சோதிட நம்பிக்கை**

சோதிடம் பொய் என்று குறிப்பிவோர் உண்டு. ஆனால் ஒன்று பொய் என்றால் அதனால் நீடித்து நிலைத்து நிற்க முடியாது. பொய்க்கு நிலைபேறு கிடையாது. மேலும் சோதிடத்தில் கரைகண்டவர்களுக்கு அது மிக உன்னதமான உயர்கலை என்பது விளங்கும். சோதிட குறையறிவு உடையோரால் கணிப்பு பிழையாகி தவறலாம். ஆனால் சோதிடம் தவறு அல்ல. ஆனால் வள்ளுவர்,

**ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்**
**தாழா துஞற்று பவர்** (620)

என்று விதியை மதியால் வெல்லமுடியும் என்கிறார். விதியை மதியால் வெல்ல முடியுமா? என்ற வினாவிற்குப் பொருத்தமான பதில் விதியை மதியால் வெல்லமுடியும். அப்படி வெல்லமுடியும் என்பதும் அவ்விதிக்குள் அடங்கும். சோதிடம் விதிகளில் மட்டும் அடங்கியதல்ல, விதிவிலக்குகளாலும் ஆனது. இன்னும் ஒருபடி மேலே போய் அது முரண்களின் மேல்தான் நிற்கிறது என்றால் மிகையல்ல. காலக்கணிதத்தைக் கணிக்க அபார ஞானம் வேண்டும் அவ்வளவே. எனவே சோதிடம் மூடநம்பிக்கை அல்ல.

**காமத்துப்பாலில் மூடநம்பிக்கை**

காமம் அறிவுக்கு நேர் எதிர். ஆசைகள் அதிகம் உள்ள இடத்தில் அறிவு குறைந்தே இருக்கும். இங்கு அறிவு என்பது ஏற்கனவே குறிப்பிட்ட உயர்நிலை அறிவுகளையும் குறிக்கும். அதிலும் ஆசைகள் முறை மாறும்போது விளைவு விபரீதம் ஆகும். காமம் என்பது எதிர்பாலின ஈர்ப்பு. அது இயற்கையான இயல்பான ஒன்று. உணவு, உடை, இருப்பிடம் போல பருவம் வந்த பிறகு வாழ்க்கைத் துணையைப்பெற்று காமம் முறையாக நிறைவு செய்ய வேண்டியது தேவையாகிறது. அதுவரை இளமைநோன்பு காத்து ஒழுக்கப்பழக்க வழக்கத்தில் மேம்பட்டு இல்லறத்தில் பெறப்படும் காமம் உயர்வானது. முறைபிறழ் நிலையில் பெறப்படும் காமம் இழிவானது. எனினும் பொதுவாக அறிவு எப்பொழுது எந்த ஒரு உலகியல் இன்பத்திற்கும் மயங்கி நிற்கிறபோது அங்கு அறிவு குறைந்திருக்கும். மூடநம்பிக்கைசார் மனோநிலை அப்போது மிகுந்து இருக்கும். காமத்துப்பால் எழுதிய வள்ளுவர் அறிவு செவ்விய அறிவு, புலன்கடந்த நல்லறிவு. அவரின் அறிவு விரிவிற்கு ஏற்ப மூன்றாம் பாலை வடிவமைத்துள்ளார். வாழ்வில் அறம், பொருள், காமம், முழுமைப்பேறு இவை சரிவிகிதத்தில் கிடைக்கபெற்றாலே அது முழுநல வாழ்வாகும்.

**கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள** (1111)

ஐம்புலன்களும் அடங்கும் இடம் இரண்டு ஒன்று காம நிலை; இன்னொன்று ஞான நிலை. முன்னது உணர்வில் ஒன்றுவது; மற்றது அறிவில் ஒன்றுவது. எனவே வள்ளுவம் சொல்வதைபோல் பஞ்சபுலன்களும் ஒடுங்கி நிற்கிற இந்த காம மனோநிலை அறிவின் மருள்நிலை, ஞான மனோநிலை அறிவின் அருள்நிலை. போகத்தையும் யோகமாக மாற்றும் கலையில் வல்லவர்கள் நம் மகான்கள். அவர்களுள் ஒருவரே நம் வள்ளுவப்பெருந்தகை. எனவே, வள்ளுவரின் காமத்துப் பாலில் பெரும்பான்மையான குறள்கள் இலக்கிய நயத்தோடு, புனைவோடுதான் இருக்கும். அதுவே அவ்வியலுக்கு அழகு.

**மதியும் மடந்தை முகனும் அறியா**
**பதியின் கலங்கிய மீன்** (1116)
**அனிச்சமும் அன்னத்தின் தூவியு மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்.** (1120)
**பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வாலேயி றூறிய நீர்** (1121)
**கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்**
**திருநுதற் கில்லை யிடம்** (1123)

இவை போன்றவை உணர்வெழுச்சியின் அழகியல் வடிவங்கள். அறிவுநிலைக்கு ஒவ்வாதவை. ஆனால், உணர்வில் அறிவைப் பயன்படுத்தினால் மட்டுமே கற்பனை வளமும், ஆக்கத்திறனும் ஒன்றிணைந்து இதுபோன்ற கவிதைகளை கலைகளைப் படைக்க முடியும். வள்ளுவர் மூடநம்பிக்கையாளர் இல்லை உணர்விலும் அறிவை இணைத்து உருவாக்கும் இரசவாதி.

**முடிவுரை**

வள்ளுவம் உலகப்பொதுமறை. அது சாதி சமயம் போன்ற எல்லைக் கடந்தது என்ற பல்வேறு புகழ்மொழிக்கு உரியதாக விளங்கினும், வள்ளுவர் தமிழர் அல்லர்; சமணர், அஃது ஒரு சமண நூல் என பல்வேறு முரண்பாடுகளமைந்த கருத்துக்களுக்கும் உள்ளாகிறது. அத்தன்மையில் வள்ளுவரது கருத்துகள் சில மூடநம்பிக்கைகளை புகட்டுவதாக உள்ளது என்ற கருத்தும் உளது. இக்கட்டுரை அவை மூடநம்பிக்கைகளை புகட்டவில்லை என்பதை காரண காரியத்துடன் எடுத்தியம்பியுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**துணை நின்ற நூல்கள்**

1. பரிமேலழகர்- ***திருக்குறள்***, சாரதா பதிப்பகம், பதினேழாம் பதிப்பு - 2014

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**தினேஷ்வரன், மா. " வள்ளுவத்தில் மூடநம்பிக்கை எதிர்ப்பியல் சிந்தனைகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 2, ஜூலை 2021, பக். 25-31

**Cite this Article in English**

**Dhineshwaran, M. " Anti-superstious perspectives in Thirukkural "** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 2, July 2021, pp. 25-31

## கடல்வாழ் மீன் இனங்களும் பயன்பாடுகளும்

## Marine fish species and its uses

**முனைவர் து. சவிதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்.

**Dr Savitha D**, Assistant Professor, Department of Tamil, PSGR Krishnammal Women's College, Coimbatore.

DOI:10.5281/zenodo.5105853

**Abstract**

Fishes are playing a pivotal role in maintaining the natural sustainability of earth. Seashore are created and saved by the various sea creatures only. In numerous cultures fishes are worshipped as the holy gods, as cultural symbols and in various times as the religious identity as well. In world economy fishes are helping the human lives by being the food, medicines and it also helps to stabilise the economy of fishermen's and their livelihood.

**ஆய்வுச்சுருக்கம்**

நம் பூமியின் இயல்பை தீர்மானிப்பதில் மீன்கள் பெரும்பங்காற்றுகின்றன. கடற்கரைகள் சில வகை கடல் உயிரினங்களாலேயே உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.பல்வேறு பண்பாடுகளில் மீன்கள் புனித தெய்வமாகவும், பண்பாட்டுச் சின்னமாகவும் பல்வேறு காலகட்டத்தில் சமய அடையாளமாகவும் திகழ்ந்துள்ளது. உலகப்பொருளாதரத்தில் மனிதர்களுக்கு, வணிகரீதியாகவும், உணவுப்பொருளாகவும், மருந்துப்பொருளாகவும், மீனவர்களுக்கு வாழ்வாதாரமாகவும் மீன்வளம் முக்கியப்பங்கு வகிக்கிறது

**Keywords :**

Fisherman Life – Word economy fishes , மீனவர்கள், நெய்தல் நிலம், வாழ்வியல்

**முன்னுரை**

நீரின்றி அமையாது உலகு என்பது வள்ளுவர் மொழி. அதற்கேற்றாற் போல் நம் பூமியானது 71 விழுக்காடு (அதாவது மூன்றில் இரண்டு பங்கு) நீர்ப்பரப்பைக் கொண்டுள்ளது. பெருந்திரளான நீர்பரப்புத் தொகுதியைப் பெருங்கடல்கள் என்கிறோம். நாம் வாழும் உலகில் ஐந்து பெருங்கடல்கள் உள்ளன. நமது இந்தியாவின் கிழக்கே வங்காள விரிகுடா, மேற்கே அரபிக்கடல், வடக்கே இமயமலை, தெற்கே இந்து மகா சமுத்திரம் என மூன்று பக்கம் கடலாலும், ஒரு பக்கம் நிலத்தாலும் சூழப்பட்டு தீபகற்ப நாடாகத் திகழ்கிறது. ஐந்திணை இலக்கியப் பின்புலத்தில் உழவு, வேட்டை, மீன்பிடி, கால்நடை மேய்த்தல் ஆகிய தொழிலில் ஈடுபட்ட மக்கள் ஏற்றத் தாழ்வற்ற தலைமக்களாகக் கருதப்பட்டனர். இவ்வாறான தொழில்களை மக்கள் மேற்கொண்டமையை சங்க இலக்கிய அகப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. நாகரிகம் வளர வளர மனிதன்தான் வாழும்

இடத்திற்கேற்ப தன் தொழிலை அமைத்துக் கொண்டான். இங்ஙனம் கடல் போன்ற நிலைகளின் அருகே மரபு வழியாக தங்கியவர்கள் மீன்பிடி தொழிலை முதன்மையாக்கிக் கொண்டனர். இவ்வகையில் கடலை ஆதாரமாகக் கொண்ட பரதவர்கள் பெரும்பகுதி கடலிலேயே தொழில் புரிகின்றனர். கடலையும் கடல்படு பொருட்களையும் நம்பி வாழ்கின்ற மீனவர்கள் தங்கள் தொழில்களுக்கென்று சில வழக்கங்களைக் காலம் காலமாகக் கையாண்டு வருகின்றனர்.

**கடல்**

கடல் என்றாலே நம் நினைவுக்கு வருவது அதன் கவர்ந்திழுக்கும் நீலநிறம். ஓயாது கரைக்கு வந்து செல்லும் அலைகள், தவழ்ந்து விளையாடும் கப்பல்கள், கரைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம், கடல்நீரின் உப்புக்கரிக்கும் சுவை. கடற்தாயின் குழந்தைகளான மீன்கள் திமிங்கலங்கள் ஆகியவையே. இத்தகைய கடலானது பூமியில் 71 விழுக்காடு பரப்பைக் கொண்டு விளங்குகிறது.

கடல் நீரானது உப்புக் கரிப்பதாக உள்ளது. இதற்குக் காரணமாக "கடல்நீரில் உப்பு நிறைந்துள்ளது. ஒவ்வொரு கிலோ எடையுள்ள கடல்நீரிலும் 30 முதல் 34 மி.கி வரை உப்பு உள்ளது. இந்த 'உப்பு' என்ற வார்த்தையில் பலவகையான உப்புகள் அடங்கியுள்ளன. இந்த உப்புக்களில் முக்கியமான சோடியம் மட்டும் 30-31 விழுக்காடு வரை உள்ளது". என வி.சுந்தரராஜன், வி.இராமதாஸ், ஆர்.ராகவன் (உடல்நலத்தில் கடல் ப.9) ஆகியோர் கூறியுள்ளனர்.

கடலில் அடிக்கடி கொந்தளிப்பு ஏற்படுவதை நாம் காண்கிறோம். இந்தக் கொந்தளிப்புக்கு காரணமாக "முழுநிலவு மற்றும் அமாவாசை நாட்களில் பூமி, சூரியன் சந்திரன் ஆகிய மூன்றும் ஏறக்குறைய நேர்கோட்டில் அமைந்து இருப்பதால் சூரியனின் ஈர்ப்பு விசையும், சந்திரனின் இழுவிசையும் அதிகமாக இருக்கும். இதனால் அதிக உயரமுடைய உயர்மட்ட ஓத அலைப்பெருக்குகள் தோன்றுகின்றன. இதனை உவாப் பெருக்கு (Spring Tide) என்று அழைக்கின்றனர்" நா.இராம்ஜி (தொ.ஆ), (ஆழிப்புதையல், ப.4) என்று கூறப்பட்டுள்ளதன் மூலம் கடலில் அமாவாசை, பௌர்ணமி தினங்களில் அதிக சீற்றத்துடன் காணப்படும் என்பது தெளிவாகிறது.

"பௌர்ணமியில் சந்திரன் பூமிக்குச் சமீபத்திலிருந்து சூரியனைக் காட்டிலும் 2½ மடங்கு அதிகம் இழுப்பதால் கடலில் கொந்தளிப்பு அதிகப்படுகிறது. அதாவது சூரியன் 2 மடங்கு இருந்தால் சந்திரன் 5 மடங்காக இருக்கும்" எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ) அபிதான சிந்தாமணி ப.385) என்று கூறப்பட்டுள்ளதன் மூலம் கடலில் கொந்தளிப்பு ஏற்படுவதற்கான காரணங்களை அறியமுடிகிறது.

**பரப்பு**

கடலின் மொத்தப்பரப்பு சுமார் பதிமூன்று கோடியே தொண்ணூறு லட்சம் சதுரமாம். நீரில் 97மூ கடலில் தான் உள்ளது. நீரில் இருப்பனவற்றை "இயற்கையில் காணப்படும் 92 இரசாயன தனிமங்களும் (Elements) அங்கேதான் கிடைக்கிறது. உலகிலுள்ள உயிரினங்களில் தாவரங்களும் பிராணிகளும் ஐந்தில் நான்கு பங்கு கடலிலேதான் உள்ளது. கடலில் சுமார் 40.000 வகையான மீன்கள் வாழ்கின்றன என்றும், 100 அடி நீளமும், 150 டன் எடையுமுள்ள மிகப்பெரிய உயிரினமான நீலத்திமிங்கலம் முதல் கண்ணுக்குத் தெரியாத மிக நுண்ணிய உயிரினங்களும், தாவரங்களும் கூட அங்கேதான் வாழ்கின்றன" (கடல்வாழ் உயிரினங்கள் ப.7) என்று எஸ்.சங்கரராமன் அவர்கள் கூறியுள்ளார். இதன் மூலம் கடலின் ஆழ்ந்த பரப்பளவானது புலனாகிறது.

**பல்வேறு வகை நிறங்கள்**

கடலின் நிறம் என்னவென்று கேட்டால் அனைவரும் பொதுவாகக் கூறுவது நீலநிறம் மட்டுமே. ஆனால் உண்மையில் கடலானது அவ்வாறு தோன்றினாலும், அது ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு வண்ணமாகத் தோன்றுவதாக அறிஞர்கள் கூறியுள்ளனர். "நடுக்கடலில் நீரினுள் சூரிய ஒளி புகும்போது அதிலுள்ள சிவப்பு நிறக் கதிர்களை நீர் உட்கொண்டு விடுவதால் கடல் அங்கு நீலமாகத் தோன்றுகிறது. ஏராளமான மஞ்சள் (அ) சிவப்பு நிறமுள்ள ஒருவித அந்நிய தாவரங்கள் நிறைந்திருப்பதால் செங்கடல் (Red Sea)சிவப்பு நிறமாக உள்ளது. இதே போல் மெக்ஸிகோ வளைகுடாவும், கலிபோர்னியா வளைகுடாவும் சிவப்பு நிறமுடையனவாக உள்ளன. மஞ்சள் நதி லோயஸ் எனப்படும் நிறமுடைய மண்ணை நீருடன் அடித்துக் கொண்டு வந்து கடலில் கலந்து விடுவதால் சீனாவை அடுத்துள்ள அக்கடல் மஞ்சள் நிறமுடையதாக உள்ளது. அதற்கு மஞ்சள் கடல் (Yellow Sea) என்று பெயர். கருப்பு நிறமுடைய இரும்பு சல்பைடு, கருங்கடலின் (Block Sea) நீரை கருப்பாக்குகிறது" (கடல்வாழ் உயிரினங்கள் ப.6) என கடலின் நிறங்கள் பற்றி எஸ்.சங்கரராமன் குறிப்பிட்டுள்ளார்.

**வளம்**

அகன்று, பரந்து விரிந்த கடலானது ஒரு முப்பரிமான ஊடகம் ஆகும். பண்டையத் தமிழ் இலக்கியங்கள் கடலைப் பரவை என்கிறது. பரவை என்பதற்குப் 'பரந்துபட்ட' என்ற பொருள் உண்டு. பரந்துபட்ட என்ற பொருளுக்கு ஏற்ப, அது தன்னகத்தே பல்வேறு வகையான தாவரங்களையும், ஒரு செல் நுண்ணுயிர் முதல் உலகின் மிகப்பெரிய திமிங்கலம் வரைக் கொண்டுள்ளது. இவற்றுள் உணவாகவும், மருந்தாகவும் பயன்படும் உயிரினங்களும், பல்வேறு வகையான கனிமப்பொருட்களும், விலையுயர்ந்த முத்துக்களும், சங்குகளும் அடங்கியுள்ளன.

**தமிழ்நாட்டின் கடல்வளம்**

இயற்கை வளம் நிறைந்த தமிழகம் 1000 கி.மீ நீளமுடைய கடற்கரையைக் கொண்டது. இந்தியக் கடற்கரை நீளத்தில், தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாக திகழ்கிறது. "கடற்கண்ட திட்டுப் பரப்பளவானது, ஏறத்தாழ 41,400 சதுர கி.முp கடலின் வளமான பகுதியானது, கடற்துறையிலிருந்து ஏறத்தாழ 40 முதல் 60 கி.மீ வரை (சராசரி 43.1 கி.மீ) பரந்து விரிந்துள்ளதாகக் கூறப்படுகிறது" (வீ.நாகநாதன் (தொ.ஆ) மன்னார் வளைகுடா கள ஆய்வேடு ப.7) என்பதன் மூலம் தமிழ்நாடு நீண்ட அகன்றக் கடற்கரையைக் கொண்ட மாநிலம் என்பதை விளங்க முடிகிறது

**மீன்களும், அவற்றின் தன்மைகளும்**

தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்கள் உள்ளன. இவை, அவற்றின் இயற்கை வளத்திற்கேற்ப நான்கு மண்டலங்களாகப் பிரிக்கபட்டுள்ளன. அவை முறையே பின்வருமாறு:

1. சோழ மண்டலக் கடற்கரை - 350 கி.மீ. நீளம். (சென்னையிலிருந்து தஞ்சாவூரின் ஒரு பகுதி வரை)
2. பாக்ஜலசந்தி - நீளம் 270 கி.மீ (தஞ்சாவூரின் ஒரு பகுதியிலிருந்து இராமநாதபுரத்தின் ஒரு பகுதி வரை)
3. மன்னார் வளைகுடா - நீளம் 320 கி.மீ (இராமநாதபுரத்தின் ஒரு பகுதியிலிருந்து கன்னியாகுமரியின் ஒரு பகுதி வரை)
4. மேற்குக் கடற்கரை நீளம் 60 கி.மீ (கன்னியாகுமரியின் எஞ்சிய மறுபகுதி)

**(வீ.நாகநாதன், மன்னார் வளைகுடா களஆய்வேடு .7)**

இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ள கடற்பகுதிகளில், மூன்றாவதான மன்னார் வளைகுடா, நான்காவதான மேற்குக் கடற்கரைகளில் அமைந்துள்ள கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமேஸ்வரம் போன்ற ஊர்களின் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் சிலவகை மீன்களும், அவற்றின் மருத்துவப் பயன்களும் கூறப்பட்டுள்ளது. சுறாக்களின் வகைகளான கொம்பன் சுறா, வரிப்புலியன், இழுப்பா, வேலா, உழுவை போன்ற மீனினங்களும், சீலா, மாங்காய்ச் சாளை, சூரை மீன், நெத்திலி, திருக்கை மீன்களும், பாறை, பன்னா, கும்ளா, சாரப்பொடி, கரமீன், தேனி, மின்சார மீன்கள், ஓங்கல்கள் (டால்பின்) போன்ற மீன்களும் அவற்றின் பயன்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

**சுறாமீன்கள் (Shark hammer Head)**

மீன்களில் சுறாமீன்களின் வகைகளாக "வேளா, இழுப்பா, கொம்பன் சுறா, வரிப்புலியன், உழுவை போன்ற சுறாமீன்கள் உள்ளன.

**தகவமைப்பு**

"பொதுவாக சுறாமீன்களுக்கு உண்மையான எலும்புகள் கிடையாது. இது குருத்தெலும்பு மீன் வகையைச் சார்ந்தது. சுறாக்கள் கடலில் மிகவும் வேகமாக நீந்தக் கூடியது. சென்டிமீட்டர் நீளம் உள்ள பிக்மி சுறா முதல் 12 மீட்டர் திமிங்கல சுறா வரை சுறாக்களில் பல சிற்றினங்கள் உள்ளன" என்று தமிழ் விக்கிப் பீடியா கூறுகிறது.

"சுறாக்களின் உடல் முன்னும் பின்னும் குறுகலாக இருக்கும். இதன் வாய் தலையின் முனையில் அமையாமல், தலையின் அடிப்பாகம் பிறை வடிவில் அமைந்துள்ளது. தாடைகள் பலம் வாய்ந்தவை. கழுத்தின் செவுள் பிளவுகள் வரிசையாகத் தனிதனியாகத் தெரியும் என்று கூறப்படுகிறது" (எஸ்.சங்கரராமன் கடல்வாழ் உயிரினங்கள் ப.24) இதிலிருந்து சுறாமீன் மற்றும் அதன் அமைப்பு, தன்மைகள் பற்றி அறிய முடிகின்றது.

சுறாமீன்கள் செவுள்கள் மூலம் சுவாசிக்கின்றன. மற்ற மீன்களைப் போல் மிதப்பையைக் கொண்டிருப்பதில்லை. "சுறாக்கள் குறைந்த எடையுடைய கசையிழைகளாலான வன் கூட்டைப் பெற்றுள்ளதால் அதிக நீட்சித்திறன் பெற்று,நீரில் மூழ்காமல் மிதக்க இயலுகிறது" என்று நா.ராம்ஜி (தொ.ஆ), (ஆழிப்புதையல், ப.65) அவர்கள் கூறியுள்ளதன் மூலம் சுறாக்களின் சுவாசிக்கும் திறனையும், அவற்றின் நீந்தும் திறனையும் அறிய முடிகிறது.

**பயன்கள்**

"சுறாமீனின் கல்லீரல் எண்ணெயில் வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'டி' அதிகமிருப்பதால் இவை 'ரிக்கெட்ஸ்' எனும் நோய்க்கும், காசநோய்க்கும், உடல் இளைப்புக்கும் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது

1. சுறா மீனின் ஈரல் எண்ணெயில் அதிகளவு 'ஏ','பி' உயிர்ச்சத்துக்கள் நிறைந்துள்ளதால், இந்த ஈரலை உயிர்ச்சத்துக் களஞ்சியம் என்பர்.
2. சுறாமீனின் கல்லீரல் எண்ணெயைக் காயங்கள், புண்களின் மீது இதனைப் பூசிவரக் குணம் கிடைக்கிறதென்றும், சுத்திகரிக்கப்படாத சுறாமீன் எண்ணெய்ப் சோப்பு மற்றும் உணவுப் பொருட்கள் தயாரிப்பில் பயன்படுவதாக் கூறப்படுகிறது." ச.பரிமளா (மீன்கள் அன்றும் இன்றும் ப.88) இதன் மூலம் சுறாமீன்களின் கல்லீரல் எவ்வாறு பயன்படுகிறது என்பதை அறியமுடிகிறது.
3. "சுறாமீனின் நீண்ட துடுப்புகள் வெட்டியெடுக்கப்பட்டு, உலர்த்தப்பட்டு, பதப்படுத்தப்பட்டு சீனா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் நாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றதென்றும், இந்த துடுப்புகளை வேக வைத்து தயாரிக்கப்படும் ரசம் அதிகச்

சுவை மிக்கதென்றும், மருத்துவ குணம் மிக்கதென்றும், புத்துணர்வும், இளமையையும் அளிக்கும் தன்மை கொண்டதென்றும் கூறப்படுகிறது. அதனால் அந்நாட்டு மக்கள் இதனை முக்கியப் பானமாக அருந்துவதாகக் கூறப்படுகிறது" ச.பரிமளா (மீன்கள் அன்றும் இன்றும் ப.90) எனக் கூறப்பட்டுள்ளதால் சுறாவின் தோல் பயன்படும் விதம் விளங்குகிறது.

இதன் மூலம் சுறாவின் துடுப்புகள் கூட வீணாக எறியப்படாமல் பயன்படுத்தப்படுவதை அறிய முடிகிறது. இவ்வாறு சுறாமீனின் கல்லீரல், தோல், துடுப்பு என அனைத்துப் பாகங்களுமே பயன்படுவதை அறிய முடிகிறது.

**சுறாவின் வகைகள்**

சுறாக்களில் ஏறக்குறைய 440 வகைகள் உள்ளவென்றும், இவற்றுள் 30 வகைச் சுறாக்கள் மட்டுமே மனிதர்களைத் தாக்குபவை என்றம் கூறப்படுகிறது.

"பொதுவாக நம்தமிழகப் பகுதிகளில் 1.உடும்பன்சுறா, 2. குரங்கன்சுறா, 3. புள்ளிச்சுறா, 4. இரம்பச்சுறா, 5. கொம்பன்சுறா, 6. பால்சுறா என்றும் வகைகள் கிடைக்கின்றன என்று தகவல்கள் கூறுகின்றன. இவற்றில் சிறிய சுறாக்கள் உணவிற்காகவும், பெரிய சுறாக்ககள் எண்ணெய்க்காகவும் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. மன்னார் வளைகுடாவில் புலிசுறா, பால்சுறா, சுத்தித்தலை சுறா (கொம்பன் சுறா) போன்ற இனங்கள் காணப்படுபதாகக் கூறப்படுகிறது" (நா.ராம்ஜி (தொ.ஆ), (ஆழிப்புதையல், ப.65)

**கொம்பன் சுறா**

**தகவமைப்பு**

சுறாக்களிலேயே மிகப் பெரியதாகக் கூறப்படுகிறது. "கொம்பன் சுறாவின் தலையில் கொம்புப்பகுதியில் கண்களும், மூக்குத்துளைகளும் அமைந்துள்ளன. இதன் உடலின் மேற்பரப்பு கருஞ்சாம்பல் நிறமாகவும், அடிப்பரப்பு வெண்மையாகவும் உள்ளது. இது 6 அடி நீளம் வரை வளரக் கூடியதென்றும் கூறப்படுகின்றது". இதன் மூலம் கடல்வாழ் மீனினங்களில் மிகப்பெரியதும் கொடியதுமான விலங்கு சுறாமீன் என்பதை உணர முடிகிறது. "கொம்பன் சுறாக்கள் தன் நீண்ட உடலின் காரணமாகவும், தலைப்பகுதி பக்கவாட்டில் நீண்டு இருபுறமும் கொம்பு போன்ற அமைப்புகளைக் கொண்டு இருப்பதாலும் (ஒரு சம்மட்டியை ஒத்திருப்பதால்) "சம்மட்டித் தலையன் சுறா" (அ) "சுத்தித் தலைச்சுறா" என்று பெயர் பெற்று விளங்குவதாக ச.பரிமளா (மீன்கள் அன்றும் இன்றும் ப.88) அவர்கள் தன் நூலில் கூறியுள்ளார். இலக்கிய வகைகளில் இந்த சுறாமீன்கள் " கோட்டு மீன்" என்று அழைக்கப்பட்ட வழக்குக் காணப்படுகிறது. இவற்றின் கொம்புகளின் அமைப்பினைக் கொண்டு "நெட்டை கொம்பன் சுறா","குட்டை கொம்பன் சுறா" என்று பல பெயர்களில் மீனவர்களால் அழைக்கப்படுவதாக அறியப்படுகிறது.

**பயன்கள்**

சுறாமீனின் கல்லீரலுடன் வெல்லம் சேர்த்து புட்டு செய்து மாலைக் கண் நோய் உள்ளவர்களுக்குக் கொடுப்பது இன்னும் கூட சில பகுதிகளில் வழக்கத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது. குழந்தைகளின் கணை நோய்க்கு இந்த எண்ணெயினை உண்ணக் கொடுத்து உடம்பிலும் பூசி, காலை நேரத்தில் இளம் வெயிலில் சிறிது நேரம் நிற்க வைத்தால் அந்நோய் குணமாகும் என்று கூறப்படுகிறது. தமிழகக் கடலோரத்தில் வாழும் மக்கள் சுறாவின் கருவாட்டைப் பத்தியப் பொருளாகப் பயன்படுத்தி, குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு கொடுக்கின்றனர். அதனால் பால்சுரப்பு அதிகமாகும் என்று கூறப்படுகிறது.

**"அத்திப் பிஞ்சு கருவாழை யதன்றன் பிஞ்சு பூவாகும்**
**கத்தித் திரியும் ஊர்க்குருவி காடையுடனே சிவல்ஆமை**
**சுத்தமாங்காய் நறும்பருப்புஞ் சுறாமீன் திருக்கைக் கருவாடாம்**
**பத்தியத் திலிவை தவிரப் பச்சைமீன்கள் பகையாமே"18**

**(பதார்த்தகுணசிந்தாமணி பா.1250)**

என்று பாடலானது மீன்களில் சுறாமீன், திருக்கைமீன் கருவாடுகள் பத்தியத்திற்குதவும் மீன்களென்றும், பச்சைமீன்கள் பகையாகுமென்றும் கூறப்பட்டுள்ளதன் மூலம் சுறா, திருக்கையின் பயன்களை அறிய முடிகிறது.

**புலிச்சுறா - வரிப்புலியன்**

புலிச்சுறாக்களின் தகவமைப்பு பற்றி புலிச்சுறாக்கள் 20 அடி நீளம் வரை வளரக் கூடியது. இதன் உடலின் மேல்பரப்பு சாம்பல் நிறத்துடன் கரும்புள்ளிகள் நிறைந்தும் காணப்படுவதால் இதற்கு அப்பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது". கொள்ள முடிகிறது." (எஸ்.சங்கரராமன் கடல்வாழ் உயிரினங்கள் ப.30) இதன் மூலம் புலிச்சுறாவின் வண்ணங்களை அறிந்து

**தகவமைப்பு**

புலிச் சுறாக்களுக்கு பற்கள் கூர்மையாகவும், சாய்வாகவும் அமைந்திருக்கும் என்று கூறப்படுகிறது. இவற்றிற்குப் பத்து வருடங்களில் 24000 பற்கள் முளைப்பதாகச் கூறப்பட்டுள்ளது என்ற கருத்தின் வழி சுறா மீன்களின் சூழ்நிலைத் தகவமைப்பு முறையினை அறியமுடிகிறது.

"இச்சுறாமீன்கள் முட்டைகளையிட்டுக் குஞ்சுகளைப் பொரிக்கின்றன. இவற்றின் முட்டைகள் ஒரு கரிய நிறப் பை போன்ற அமைப்பில் வைக்கப்பட்டிருககும். இப்பை மிகுந்த அழுத்தமான ஓடு போன்ற தோற்றம் கொண்டிருக்கும். இவைகளின் ஓரம் கொம்புகளைப் போன்ற கொக்கிகளைக் கொண்டு கடல் தாவரங்களிடையே ஒட்டிக் கொண்டிருக்கும். மீன்குஞ்சுகள்

வளர்ந்ததும் இந்தப் பையினை உடைத்துக் கொண்டு வெளிவரும். இவற்றினை "கடற்கன்னியின் காசுப்பை" என்றும் அழைப்பர்". ச.பரிமளா (மீன்கள் அன்றும் இன்றும் ப.136) இதன் மூலம் சுறாக்கள் தன் இனத்தை பாதுகாக்கும் முறையினையும், இனப்பெருக்கத்திறனையும் அறிய முடிகிறது.

**பால்சுறாக்கள் (Milk Sharks)**

தமிழகக் கடல்களில் குறிப்பாக மன்னார் வளைகுடாவில் இவ்வகையான மீன்கள் அதிகம் கிடைப்பதாகக் கூறப்படுகிறது.

**தகவமைப்பு**

"சிறிய சுறாவகையைச் சார்ந்த இவற்றின் உடலின் மேல்புறம் சாம்பல் நிறமாகவும், கீழ்பகுதி வெண்மையாகவும் இருக்கும் என்று கூறப்படுகிறது. வாய் நுனி நீள்வட்டம் போன்றும், வாய் கூர்மையாகவும், பின் துடுப்பின் மேடு உடலின் மேல்புறத்திலும் துடுப்புகளின் அடியிலும் காணப்படும் என்று கூறப்படுகிறது". (வீ.நாகநாதன் மன்னார் வளைகுடா களக்கையேடு ப.141) இவ்வாறு கூறப்பட்டுள்ளதன் மூலம் பால்சுறாக்களின் தகவமைப்பானது விளங்குகிறது.

**திருக்கை மீன்கள்**

சுறாமீன்களைப் போன்றே இத்திருக்கை மீன்களும் குருத்தெலும்பு மீன்களின் பிரிவினைச் சார்ந்தவையாகக் கூறப்படுகிறது. "திருக்கு எனும் சொல்லுக்கு முறுக்கு, வளைந்த என்று பொருள் கூறப்படுதலினாலும், அதன் வளைந்த வால் ஒரு கையினைப் போல் செயல்படுகிறதாலும் திருக்கை என்ற காரணப்பெயர் பெற்றிருப்பதாகக் கருதப்படுகிறது" (ச.பரிமளா மீன்கள் அன்றும் இன்றும் ப.157) இதன் மூலம் அதிக நீண்ட வாலினைக் கொண்டிருக்கும் மீன்கள் திருக்கை மீன்கள் என்பதையும் திருக்கை என்ற பெயர் காரணத்தையும் உணரலாம்.

**தகவமைப்பு**

திருக்கை மீனின் தகவமைப்பு பற்றி, "திருக்கை மீன்களும் சுறாக்களைப் போல கசையிழையினாலான வன்கூட்டைக் கொண்டவை. கடலின் அடியில் வாழும் இவை தட்டையான உடலமைப்பைக் கொண்டவை. இவற்றுக்கு செவுள்கள் இல்லை. மார்புப் பகுதியில் இடுப்புத் துடுப்புகளினடியில் செவுள் திறப்புகள் காணப்படுகின்றன" என நா.இராம்ஜி (தொ.ஆ), (ஆழிப்புதையல், ப.56) குறிப்பிட்டுள்ளார்.

**ஓங்கிகள் (Dolphin)**

மீன் இனங்களிலேயே மிகவும் சாதுவானதாகவும், மிகவும் நட்புடன் பழகும் தன்மை கொண்டனவாகவும், மனிதர்கள் கடலில் தவறி விழும்போது அவர்களை காப்பாற்றும் கடல்

ராணுவ வீரர்களாகவும் செயல்படுவன இந்த ஓங்கல்கள் எனப்படும் டால்பின் மீன்களே என அறியப்படுகிறது.

தன்னலத்துடன் வாழும் மனிதர்களுக்கு மத்தியில் அன்பையும், நட்பையும் போதிக்க ஒரு உதாரணமாக இந்த டால்பின் மீன்கள் கூறப்படுகின்றன. மனிதனுக்கு அடுத்து அறிவுக் கூர்மையுள்ள பிராணிகள் இந்த டால்பின் மீன்களே. “டால்பின் மீன்களின் அலகு சற்று நீண்டும், உடல்மீன் போன்றும் காணப்படும். நன்கு விளையாடும் தன்மை கொண்டும் பழகுவதற்கு இனிமையும் கொண்டவை இந்த டால்பின்கள்” (ஜோ டி குருஸ் ஆழி சூழ் உலகு ப.330) எனக் கூறப்பட்டிருப்பதன் மூலம் டால்பின்களின் தகவமைப்பினை அறிய முடிகிறது.

டால்பின்கள் மிகுந்த புத்திக் கூர்மை கொண்டவை என்பதை “Dolphins are brilliant animals: they can be trained dogs. In foreign countries, dolphins are kept and trained in the marine water poals for the amusement purpose. Currently approximately 2700 dolphins are kept in marine water pools”[37] (S.Shenbagamoorthy,V.Naganathan, R.Uma Maheswari Gulf of Mannar Marine National Park Information Mannual P.10) என அறியலாம்.

மேலும் நாய்களை போன்றே பயிற்சி அளித்தால் அவை சொன்னபடி செய்யும். ஆகவே மேலை நாடுகளில் இவற்றை கடல்நீர்த்தொட்டிகளில் வைத்து ‘டால்பின் அருட்காட்சியகம்’ அமைத்து, அவற்றின் விளையாட்டினை மக்கள் கண்டு வியந்து, மகிழ்ச்சியடையச் செய்கின்றனர் வெளிநாட்டினர்” வீ.நாகநாதன் (மன்னார் வளைகுடா களக்கையேடு ப.51) தற்பொழுது, 2700 ஓங்கிகள், கடல் நீர்தொட்டிகளில் வளர்க்கப்படுகின்றன என்ற கூறப்பட்டிருப்பதன் மூலம் ஓங்கிகளின் பயன்பாட்டை அறிய முடிகிறது.

“ஓங்கிகள் எப்போதும் கூட்டமாகவே வாழும் இயல்புடையவை. இவற்றின் பார்வைத்திறனும் நுகரும் திறனும் குறைவாக இருப்பதால், இரையை கண்டறிவதற்கு மீயொலிகளை உருவாக்கும். இந்த மீயொலிகள் இரையைப் பிடிப்பதாகக் கூறப்படுகிறது. இந்தியாவில் பதினான்கு வகையான ஓங்கிகள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது” நா.இராம்ஜி, (ஆழிப்புதையல், ப.60-61) என்பதிலிருந்து ஓங்கி மீன்களின் இரைதேடும் முறையினை அறிய முடிகிறது.  கடலில் வாழும் பாலூட்டி இனங்களுள் செட்டாசியா எனும் பிரிவில் வரும் மூன்று வகை மீன்களுமே ஓங்கிகள் இனமாகத்தான் விஞ்ஞானிகளால் வழங்கப்படுகின்றன.

1. டெல்பினிடே (Delphinidal) எனும் நாம் காணும் சாதாரண டால்பின். (இதில் அளவு டால்பின் ஆகியவையும் அடங்கும் என்று கூறப்படுகிறது.
2. ஸ்டெனிடே என்னும் நீளமூக்கு டால்பின்கள்
3. பிளாடானிஸ்டிடே எனும் தூயநீரில் வாழும் டால்பின்கள்

மேற்சொன்ன அனைத்து வகையுமே பிற மீனினங்களை உண்டு வாழ்பவை. குறிப்பாக 'கில்லர் வேல்' என்பது டால்பின்களுள் பகாசுரனாகும். அது ஒரு திமிங்கலத்தையே கொன்று தின்று விடும் வலிமை படைத்தது என்றாலும் இவை மூன்றுமே மனிதனுக்கு நட்பாகச் செயல்படும் தன்மை கொண்டவையாகக் கூறப்படுகிறது". (எம்.தியாகராஜன் டால்பீன் மீன்களைப் பற்றிய வியப்புக்குரிய விசயங்கள் ப.10-11)

**சாதா ஓங்கி (dolphine Delphis)**

இவை மன்னார் வளைகுடாவில் அதிகம் காணப்படுகின்றன. இவற்றின் தகவமைப்பு பற்றி "சாதா ஓங்கிகளின் உடலின் மேற்புறம் கறுப்பு நிறத்திலும், அடிப்புறம் வெண்மையாகவும், உடலில் பக்கவாட்டுப் பகுதியில் சாம்பல் (அ) மஞ்சள் கலந்த பழுப்பு நிறக் கோடுகள் காணப்படும். சுமார் 75 கி.கி. எடையுடைய இவை 1.8 மீ முதல் 2.4 மீ நீளம் வரை வளர்கின்றன. நா.இராம்ஜி (தொ.ஆ), (ஆழிப்புதையல், ப.61) என்பதிலிருந்து சாதா ஓங்கிகளின் உடலமைப்புப் புலப்படுகிறது.

**குடுவை மூக்கு ஓங்கிகள் (Trusipps Turcatus)**

பெயருக்கு ஏற்றார் போல் குடுவை போன்ற மூக்கைக் கொண்டிருக்கும். அதனின் கூர்வாய் தலையிலிருந்து ஓர் கோட்டினால் தெளிவாகப் பிரிக்கப்பட்டு மேல்புற துடுப்பு வளைந்திருக்கும். கண்ணுக்கும், அலகுக்கும், நீந்து துடுப்புக்கும் இணைப்புக் கோடுகள் இருக்கும். உடலின் மேற்புறத்தில் வெளிர் சாம்பல் நிறத்திலிருந்து அடர் கருப்பு நிறம் வரை இருக்கும். அடிப்புறத்தில் சற்று வெளிர்நிறம் கொண்டு காணப்படும். இவற்றிற்கு 18-26 இணை வரிசைப் பற்களைக் கொண்டிருக்கும் என்றும், சுமார் 2 மீ நீளம் வரை வளரும் என்றும் கூறப்படுகிறது". வீ.நாகநாதன் (மன்னார் வளைகுடா களக்கையேடு ப.147-148) இவ்வகை ஓங்கிகள் கணவாய் மீன், அட்டபாதம் போன்றவற்றை உண்ணுகின்றன என்று கூறப்படுகிறது.

"டால்பின்' எனும் மீன்கள் நீந்தும் பகுதியில் சுறா மீன்கள் தென்படுவதில்லை என்றும், அவ்வாறு சுறாமீன்கள் அங்கு வந்தால் "டால்பின் மீன்" கூட்டங்கள் அவைகளை விரட்டி அடித்துவிடும் என்றும் கூறப்படுவதுண்டு. ஆனால் இன்று அறிவியலாளர்கள் அதனை மறுத்துள்ளனர். தற்போது "டால்பின்கள்" இருக்கும் பகுதியில் சுறாக்களும் தென்படுகின்றன என்றும், கூட்டத்தை விட்டு தனியே வரும் குட்டி டால்பின்களை சுறாக்கள் வேட்டையாடுகின்றன என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. ஒரு சில பகுதிகளில் டால்பின்கள் கூட்டமாகவே வருவதால் அவைகளுக்கு இடையே சுறாக்கள் வருவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது." ச.பரிமளா (மீன்கள் அன்றும் இன்றும் ப.145) இதன் மூலம் கூட்டத்துடன் டால்பின்கள் இருக்கும் பகுதிகளுக்கு சுறாக்கள் வருவதில்லை என்று அறியப்படுகிறது.

**இறால்**

இவை பொதுவாக நன்னீரிலும். உவர் நீரிலும் வாழும் உயிரினமாகும். இவை இறால் மீன் எனவும் அழைக்கப்படுகிறது. இவை கூட்டமாக வாழக்கூடியவை. பெரிய மீன்கள் மற்றும் திமிங்கலங்களுக்கு இறால்கள் நல்ல உணவாக அமைகிறது.கடல் வாழ் உயிரினங்களின் இறந்த உடல்கள் கடல் நீரில் அழிவுப் பொருட்களாக மாறுகின்றன. அதனை இறால்கள் உண்டு வளர்வதால் அவற்றை ‘கடலின் தூய்மையாளர்’ என அழைப்பர்.“மற்ற கடல் உணவுப் பொருட்களைப் போல் இறாலில் அதிகமாக கால்சியம், அயோடின் மற்றும் புரதசத்துக்கள் உள்ளன. இறால்களில் அதிகப்படியான கொழுப்பு காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்த கொழுப்பானது நல்ல கொலஸ்டிரால் எனப்படும் கொழுப்பு வகையைச் சேர்ந்ததால் இதனை உணவில் சேர்த்துக் கொள்ள மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள்” என்று கூறப்பட்டுள்ளதன் மூலம் இறால்களின் பயன்பாடுகள் புலனாகிறது. உலகளவில் ஏறத்தாழ 2000 இனங்களைச் சேர்ந்த இறால் இனங்கள் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. “இறால்களில் 45 விழுக்காடு மாமிசம் உணவுக்குப் பயன்படுவதாகவும், இவற்றில்

| | | |
|---|---|---|
| ஈரப்பதம் | : | 77.4 |
| புரதம் | : | 19.1 |
| கொழுப்பு | : | 1.0 |
| மாவுச்சத்து | : | 0.8 |
| தாதுப்பொருட்கள் | : | 1.7 |

உள்ளதாகவும், இவை தவிர கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து, தயாமின், ரிபோல்ப்ளேவின் மற்றும் தியாசின் ஆகியவையும் நிறைந்துள்ளதால் மனித உடல் நலத்துக்கு வேண்டிய பல பொருட்கள் இருப்பதால் சிறப்புணவுகளில் இறாலும் ஒன்றாகின்றது” (வி.சுந்தர்ராஜன், வி.ராமதாஸ், ஆர்.இராகவன் கடல் நலத்தில் கடல்)

**கடல் மீன் உணவு உண்பதால் ஏற்படும் பயன்கள்**

1. “கடல் மீன் உணவில் ஒமேகா-3 கொழுப்பு அமிலம் (Omega-3 Fatty Acids) உள்ளதால், இது மூளைக்கும் இதயத்திற்கும் நல்லதென்றும், நினைவு மறதி நோய் (Dementia and Alzheimen ’s disease) பாதிக்காது. இப்படி கடல் மீனை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் குழந்தைகளுக்குப் பலவகை பிரச்சனைகளுக்குத் தீர்வு தருகிறது என்று கூறப்படுகிறது. இதிலுள்ள ‘டிஎச்ஏ’ (Docosahexaenoic ancid) என்ற வேதிப் பொருட்கள் அவர்களின் அதிகமான செயல் திறனையும் (Hyper activity), நடத்தை கோளாறுகளையும் (Behavioural) சரி செய்வதாகவும் கூறப்படுகிறது.

2. கடல் உணவுப் பொருட்கள் இதயத்தின் நலத்துக்கும், அதனைப் பராமரிக்கவும் மிகவும் உதவுவதாகப் பல ஆதார ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வாரம் ஒருமுறை மீன் சாப்பிடுகிறவர்களுக்கு மாரடைப்பு வருவது பாதியாக குறைக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.
3. அமெரிக்க வாழ் செவிலிகளிடம் மீன் மற்றும் கடல் உணவு உண்ணுவது தொடர்பாக தகவல் சேகரித்ததில் அவர்களுக்கு இதய பிரச்சனை 50, சர்க்கரை நோயின் வாய்ப்பு 60 சதவீதமும் குறைந்தது தெரிய வந்ததாகக் கூறப்படுகிறது.
4. டி எச் ஏ (DHA) மகப்பேறு காலத்தில் உண்டாகும் மனவருத்தத்தைக் குறைத்து, மன இறுக்க நோயிலிருந்து பாதுகாப்பு அளிப்பதாகக் கூறப்படுகிறது.
5. கண்ணில் பல பிரச்சனைகளுக்குக் கடல் மீன் உணவு நல்லது. புற்று நோய் வரும் அபாயத்தை தவிர்க்கிறது.
6. இரண்டாம் வகை சர்க்கரை நோயும் இதனால் குறைகிறது. இரத்தக் குழாயினுள் இரத்தம் உறைதலை இரத்தக் கட்டியைத் தவிர்க்கிறது.
7. மூட்டுவலி, கீழ்வாத வலியைக் குறைக்கிறது. நுரையீரலைக் கண்காணித்து, பாதுகாத்து சுவாசம் தொடர்பான சங்கடங்கள் வராமல் கவனித்துக் கொள்கிறது.
8. ஒமேகா-3 கொழுப்புகள் நமது தோலை பளபளவென மினுக்கும் அழகுடன் வைத்துக் கொள்ள உதவுகிறது. தோல் நோய்களை அண்டவிடாமல் பார்த்துக்கொள்கிறது. முதுமைக் காலத்தில் கொலாஜென் (Coliagen) சிதைவதால் ஏற்படும் தோல் சுருக்கத்தை குறைத்து, மலச்சிக்கல் மற்றும் சீரணப் பிரச்சனைகளைத் தவிர்த்து, உடல் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதாகக் கூறப்படுகிறது.

சோடியம், இரும்பு, தாமிரம், அயோடின், செலினியம், துத்தநாகம் போன்றவை அடங்கியுள்ளன” (www.keetru.comm) என பேரா.சோ.மோகனா குறிப்பிட்டுள்ளதன் மூலம் மீன் உணவு உண்பதால் ஏற்படும் பல்வேறு பயன்களை அறியமுடிகிறது.100 கிராம் உணவில் இத்தனை விதமான சத்துக்கள் அடங்கியுள்ளன என்பதை அறியும் போது நாம் மற்ற விலங்குகளின் இறைச்சியை உண்பதை விட மீன் உணவைப் பயன்படுத்தலாம் என்பதும் உணரப்படுகிறது.

**நிறைவுரை**

கடல் உயிரினங்கள் உணவு பொருள்,மருத்துவம் போன்றவற்றிற்கான மூலப்பொருட்களாக பயன்படும் பல வகையான வளங்களைக் கொண்டுள்ளது. பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா துறைக்கும் பயன்படுகிறது. நம் பூமியின் இயல்பை தீர்மானிப்பதில் பெரும் பங்காற்றுகின்றன. ஆக்சிஜன் சுழற்சியில் கணிசமான பங்களிப்பை செய்கின்றன. கடற்கரைகள் சில வகை கடல்

உயினங்களாலேயே உருவக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. பல இனங்கள் மனிதர்களுக்கு பொருளாதாரரீதியாகவும் முக்கியத்துவம் வாய்தவையாக உள்ளன. கடல் மற்றும் கடல் சார்ந்த முக்கியமான சுழற்சிகள் பற்றிய ஆய்வுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன

**துணைநின்ற நூல்கள்**


1. முனைவர் ச.பரிமளா, மீன்கள் அன்றும் இன்றும், பதிப்பகம் தமிழ்ப்பல்கலைக்கழகம், பதிப்பு : 1991.
2. ஜோ டி குரூஸ், ஆழி சூழ் உலகு, தமிழினி அலுவலகம், 68, நாச்சியம்மை நகர், சேலவாயல், சென்னை, பதிப்பு : 2010
3. இராமஜெயம், மீனவர் வாழ்க்கையும் வரலாறும், மணிமொழி பதிப்பகம், வீரணாம்பட்டினம், புதுச்சேரி, பதிப்பு : 2002.
4. ஸபேன்சாமி.என் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் வாழ்வியல் ஓர் ஆய்வு, தங்கம் பதிப்பகம், கன்னியாகுமரி, பதிப்பு : 1994.
5. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, மதுரைத் தமிழ்ச்சங்கம், முதற்பதிப்பு : 1910.
6. தேரையர், பதார்த்தகுண சிந்தாமணி, தமிழ் மருத்துவ நூல்,
7. வீ. நாகநாதன், மன்னார் வளைகுடா களக் கையேடு,
8. எம்.தியாகராஜன், டால்பின் மீன்களைப் பற்றிய வியப்புக்குரிய விஷயங்கள், மணிமேகலை பிரசுரம்.
9. நா.இராம்ஜி (தொ.ஆ),ஆழிப்புதையல்,
10. எஸ்.சங்கரராமன, கடல்வாழ் உயிரினங்கள்.
11. மீனவர் மரபு வழி மருத்துவம், முனைவர் ப.மகாலட்சுமி,அய்யா நிலையம், 2870, கல்யாணசுந்தரம் நகர், இ.பி காலனி, நாஞ்சிக் கோட்டைச்சாலை,தஞ்சாவூர்-613006. முதற்பதிப்பு : 2004.
12. S.Shenbhagamoorthy,V.Naganathan, R.Uma Maheswari Gulf of Manner Marine National Park Information Mannual


**இணையதள முகவரி**


1. www.tamilvikipedia.com
2. www.wikipedia.com
3. வேளாண்பல்கலைக்கழக இணையதளமுகவரி(MPEDA)

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**சவிதா, து. " கடல்வாழ் மீன் இனங்களும் பயன்பாடுகளும் "** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 2, ஜூலை 2021, பக். 32-45

**Cite this Article in English**

**Savitha, D " Marine fish species and its uses "** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 2, July 2021, pp. 32-45